# தமிழர் தகவல்

Tamils' Information

டிசம்பர் - 2004
இலண்டன்



மாத சோதிடம்
உள்ளே !

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

# THARANI JEWELLERY

54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 020 8902 6777
நவநாகரீக தங்க நகைகளுக்கு
**தாரணி ஜுவல்லரி**



நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

# Vahizan Disc World



Get up to 10% off !!! From our online shopping!!!



## வாகீசன் டிஸ்க் வேள்ட்

எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டிவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக் குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றைவிட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப் பாடல்கள், கர்னாடகவாத்திய இசைகள் யாவும் MP3, AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.

WE SELL TITLES FROM INRECO, GEETHANJALI, VEDU. RPG. AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES !



Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com





Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com



# தமிழர் தகவல் Tamils' Information

டிசம்பர் 2004 | மலர் : 02 | இதழ் : 18


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். " - குறள்

## புதிய ஆண்டில் ' பொழுது ' புலருமா?

கடந்த ஆண்டில் வழமையான ஏமாற்றங்களும் இழுத்தடிப்புகளுமே தமிழீழத்தைத் தொடர்ந்து வந்தன. அமைதிப் பேச்சுவார்த்தை திரும்பவும் ஆரம்பக் கட்டத்திற்கே வந்து நிற்கிறது. எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றங்களாகிவிட்டன. அரசு நடத்துகிறவர்கள் தங்கள் ஆட்சியை நீடித்துக் கொள்ளவும், நிதிகளைப் பெற்றுக் கொள்ளவும்தான் சமாதானத்தைச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். அயலவர்களோ அடுத்தடுத்து வந்து அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லி அவர்கள் பக்கமே அனுசரணையாக நடந்து கொள்கிறார்கள். பட்டகாலேதான் பட்டுக் கொண்டிருக்கிறது. கெட்ட குடிகள்தான் கெடுக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் பாதிக்கப்பட்டவன் பற்றிப் பரிதாபப்பட எவருமில்லை. வருகிறவர்களும், வாழ்த்துவதாகச் சொல்லிக் கொள்பவர்களும் ' பேச்சுக்குப் போங்கள் ' என இலவசமாக ஆலோசனைகளைத் தான் அள்ளி வழங்குகிறார்கள். அது சாத்தியமாகுமா என்ற காரணமெதையும் கணக்கிலெடுக்கிறார்கள் இல்லை. சமாதானம் தான், உலகின் ஒப்பற்ற உன்னதமான தலைவன் ஒருவனைச் சாகடித்தது என்ற உண்மையையாவது புரிந்து கொள்ள மாட்டோமா? '' கும்பிடும் கரங்களுக்குள்ளே கொலைக்கருவியும் '' இருக்கும் என்று இலக்கியம் படித்தோமே, நாம் ஏமாற்றப்படலாமா?

இப்போது பாதுகாப்பு ஒப்பந்தம், பலப்படுத்துதல், கப்பல் கொடுத்தல், நிதியளித்தல், கரையோரத்தைக் காப்பாற்றுதல், காலாட்படைக்குப் பயிற்சி தருதல் எனப் பாதிக்கப்பட்டவனுக்கு எதிரான பல பணிகளில் அந்த ' வல்லாதிக்கம் ' வலைவிரித்து நிற்கிறது. இது பாச மழையா? மோசவலையா என்பதைத் தெரிந்து கொள்ளப் பெரும்பான்மை இனத்துக்கு இன்னும் புத்தி தெளியவில்லை. தன் இளையவனுக்கு அவன் பங்கை மறுக்கும் மூத்தவன், மாற்றானுக்கு மடிநிறையக் கொடுத்தாலும் அவன் எடுத்தாலும் பாதகமில்லை என நினைக்கிறான். ' தம்பி ' தவித்தாலும் தண்டக்காரன் கொண்டுப்போவதைப் பற்றி அண்ணனுக்கு அக்கறை இல்லாமல் போய்விட்டது. இது எதனுடைய அழிவின் ஆரம்பம் என்று இனித்தான் தெரியவரும். இந்தப் ' புனித 'மான எண்ணத்தின் பிரதிபலன்களை 2005 எப்படியோ சந்தித்துத்தான் ஆக வேண்டும். ஏற்கனவே கடல் எல்லைகளில் நிழல் தெரிய ஆரம்பித்துவிட்டது. கட்டுக்கு மீறிய சட்ட மீறல்கள் எத்தனை நாளுக்குப் பொறுமையைச் சோதிக்கும்? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். சாதுக்கள் சாகடிக்கப்படுவதற்குப் பெயர்தான் சமாதானமா? இது மதியுள்ளவர்களுக்குப் புரியும். மரமண்டையர்களுக்கு எப்போது தெரியவரும்? தெளிவான, திடமான தீர்வு இவ்வாண்டிலாவது கிடைக்கவேண்டும். கிடைக்குமா?

புத்தாண்டில் இனி நடத்தப்போகும் விழாக்களிலும் அரங்கேற்றங்களிலும் தமிழ் இடம்பெற வேண்டும். பரதநாட்டியம் உருவாக்கிய பரத முனிவர் ஆங்கிலேயரல்லர். அது அந்நியப் பண்பாட்டிற்கு ஏற்றதல்ல. குயிலின் சொந்தக் குரல் இழக்கப்பட்டு இரவல் குரலில் கூவும் நிலை வரவேண்டாம். இம்முறையானது எதிர்காலத்தின் இளைய தலைமுறையைத் தறிகெட்டோட வைத்துவிடும். ஆங்கிலத்தை அரசோச்சும் மொழியாக ஏற்றுக்கொண்டிருந்த பாவம் இதுவரை போதும். இனியும் வேண்டாம். உயரப் பறந்தாலும் ஊர்க்குருவிகள் பருந்தாக மாறிவிடுவதில்லை. எதுவும் நிரந்தரமானதல்ல. – அதுபோல் இந்தப் புலம் பெயர் வாழ்வும் நிரந்தரமானதல்ல. அப்படி நிரந்தரம் என்று நினைத்தவர்கள் பலர் நிலையிழந்ததை வரலாறு கூறியிருக்கிறது. பர்மாவில் கோலோச்சியவர்கள் தமிழர்கள் – இந்தியர்கள் 1700 மைல்கள் கால்நடையாகவே நடந்து வங்காள எல்லைக்கு வந்தார்கள். வந்தவர்களின் ஆஸ்திகள் எதுவும் இருந்தனவா? மோரிஸஸ் ஆட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்ட இந்தியர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடவில்லையா? உகண்டாவில் வெள்ளைக்காரனும் இந்தியனும் பட்டபாடு என்ன? இன்று மலேசியாவில் ஆட்சி மொழியாகச் சீனம் கட்டாயமாக்கப்பட்டு விட்டதே! அங்கிருக்கும் தமிழர்கள் கேள்விக்குறியாகி நிற்கிறார்கள். நாளை இதன் முடிவு எப்படி மாறும் எனத் தெரியாது. ஆகவே ஒட்டிக் கொண்டிருக்கும் கலாச்சாரமும் நிரந்தரமாகாது. அவற்றை நிலையென நம்புவதும் தன் சொந்த வீட்டை மறப்பதும் நியாயமானது தானா? ஆகவே எங்கும் இரண்டாந்தரப் பிரஜையாகத்தான் தமிழன் இருப்பான் – அவன் சொந்த மண்ணைத் தெரியாத வரை. ஆங்கிலேய ஆட்சியில் அடுத்துவரும் தேர்தலில் ' பழமை விரும்பிகள் ' பதவியேற்று விட்டால் ஒட்டி நிற்கும் வாழ்வின் உறுதி என்னவாகும்? ஆகவே இருக்கும் வரை நலமாக இருப்போம். நமது குழந்தைகளை நமது குழந்தைகளாக வளர்ப்போம். ஏனெனில் நம் பயணம் நீண்டிருக்கிறது. நமக்குப் பின் அது தமிழினமாகத் தொடர வேண்டும். இப்போதும் கூட இஸ்ரேல் கேட்டுக் கொண்டதற்காகத் தனது சொத்துக்களையும், சுகங்களையும் தாம் வாழ்ந்த நாட்டையும் விட்டு விட்டுப் போனார்களே பல ஜெர்மன், அமெரிக்க யூதர்கள் , அவர்களின் மண்பற்றை இனியாவது மனதில் நினைக்க வேண்டும். கதிர்காமத்தில் ஒரு முருகன் ஆலயம் கட்ட வேண்டுமென இப்போது இலங்கையில் சில ஆன்மீகவாதிகள் குரல் எழுப்புகிறார்கள். அப்படியானால் இத்தனை காலம் இவர்கள் கந்தனைக் காணத் தானே போய் வந்தார்கள். இவர்கள் கண்டதுதான் என்ன? தமிழர் கலாச்சாரத்துடன் இணையாத கந்தனைத்தான் இவர்கள் இவ்வளவு நாளும் பார்த்தார்களா? இப்போதுதான் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது ஆலயம் கட்ட அனுமதி கிடைக்குமா? இதே நிலைதான் பரதநாட்டியத்திற்கும் இனிவரும். இது தமிழ்நாட்டின் கலாசாரத்தின் சின்னமென்பதையும், நடேச மூர்த்தம் சைவனுடையதுதான் என்பதையும் மறக்கப்பண்ணத்தான் ஆங்கில ஆதிக்கம் உதவும். அதன் பின்பு கதிர்காமத்திலேயே கந்தன் கேட்கும் நிலைபோல்தான் தமிழன் நடேசரையும் நாடி இனங்காண வேண்டி நேரிடும். இதற்குப் பலியாகப் போவது புலம்பெயர்ந்த தமிழன்தான். அதன் எதிர்கால தலைமுறை தான். கற்றவர் இனியாவது கவனிக்க வேண்டும்.

இலண்டனில் சைவத் திருக்கோயில்கள் அனைத்தும் ஒரே நாட்காட்டி வழிகாட்டலில் ஒன்று சேராதா என்ற ஏக்கத்தை இங்கு மீண்டும் எழுப்ப வேண்டியுள்ளது. நமக்குள் இருக்கும் சாத்திரங்களும் சம்பிரதாயங்களும் ஆளுக்கு ஆள் வேறுபட்டு நிற்கிறது. இதை மறுத்துவிட்டு நாம் ஒரே மக்கள் என்ற குறிக்கோளுடன் இணைந்தால் என்ன? கோயிலுக்கு கோயில் வேறுபட்ட நாட்காட்டிகளும் பஞ்சாங்கங்களும் இருக்கின்றன. தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப அச்சடித்து விட்டு விற்பனையின்றித் தேங்கியபின் வீசி எறியும் நிலை வருகிறதே. இதில் வீணாகிய பணம் தமிழனுடையதல்லவா? ஒரே தலைவனின் கீழ் ஒன்றுபட்ட தமிழினம் ஒரே வழிமுறையைக் கையாண்டால் என்ன? அதற்காகவாவது தமிழ்த்தாய் நாட்காட்டியை எல்லோரும் வாங்கலாமே. ஏனெனில் அதில்தான் புலம்பெயர்ந்த நாட்டிலும், சொந்த மண்ணிலுமுள்ள விடயங்களும் விசேடங்களுமுள்ளன. இனிவரும் ஆண்டிலாவது தனிப்பட வேறுபட்டு நிற்காது பொதுவான ஒரு நாட்காட்டியாகத் தமிழ்த்தாய் நாட்காட்டியை அனைவரும் வாங்கி விநியோகிக்கலாம். ஏனென்றால் இதனால் வரும் வருமானம் ஒரு நாட்டின் கட்டுமானத்தின் படிக்கல்லாக அல்லவா பயன்படுத்தப்படப் போகிறது. உணர்வில் ஒன்றாகிய தமிழர்களே தயது செய்து இதிலும் ஒன்றாகுங்கள். ஒரு குறிக்கோளின் கீழ் தீர்மானமெடுங்கள். 2005 ஆண்டு தீர்க்கமானதாகட்டும்

– ஆசிரியர்

---

*தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்*

**வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !**


முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

வங்கி :
H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No.: 81437100

கணணி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
" **தமிழர் தகவல்** "
உங்கள்
இல்லம்தேடி வரும்



**படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே**

## அகாஷியின் நகாசு!

" உத்தேச இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் வடக்கு கிழக்குப் பற்றியதல்ல என்பதால் அது குறித்து எச்சரிக்கை கொள்ள ஒன்றுமே இல்லை. இந்த ஒப்பந்தம் இரண்டு இறைமை உள்ள நாடுகளுக்கிடையில் செய்யப்படுவதால் இதில் விடுதலைப்புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பதற்கு எதுவுமே இல்லை " என்று ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு உதவும் சர்வதேச நாடு என்ற முறையிலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முன்னணியில் இருக்கும் நாடு என்ற முறையிலும் இவ்விடயத்தல் ஜப்பானுக்கும் அதன் விசேடத் தூதுவருக்கும் இவ்விடயத்தில் கணிசமான பங்குண்டு. அவர் எட்டாவது தடவை இங்கு வந்து சென்றிருப்பது, அரசு, - புலிகள் ஆகிய இருதரப்பினருமே அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாகத்தான். அதாவது நடுநிலைமையாக நின்று செயற்படுகிறார் என்ற நம்பிக்கை இரு தரப்பினருக்குமே இருந்து வந்தது. இந்த நம்பிக்கையை இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக அகாஷி தெரிவித்த கருத்து சிதறடித்துவிட்டது.

(சுடர்ஒளி 7.11.2004)

## துரோகத்தின் எல்லை!

ஐக்கிய நாடுகள் சபையில் வடஅமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நாடு, உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கையை கண்டனம் செய்ய வேண்டுமெனக் கூற, நமது அயல்நாடான இந்தியா அதற்கெதிராக இரவோடு இரவாக அந்தநாட்டை வற்புறுத்தி, நீங்கள் இப்படியான தீர்மானத்தைச் செய்தால் அது எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறி அதனை நிறுத்திவிட்டார்கள். இது தமிழருக்கு மாத்திரமல்ல மனித விழுமியத்திற்கு இந்தியா செய்து வருகின்ற மிகப் பெரிய துரோகம், மனித நேயத்திற்குச் செய்த துரோகம்தான் என்று சரித்திரம் சொல்லும். இப்போது பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரில் பலாலி விமானத் தளத்தை புனர்நிர்மாணம் செய்யப் போகிறார்களாம். இவர்கள் வன்னி மக்களுக்கு ஒரு பனடோல் கூட அனுப்பவில்லை. இது அரசியல் இல்லை. அதற்கப்பாற்பட்ட மனித நேயம். சர்வதேக் கடற்பிராந்தியத்தில் வைத்து கிட்டு அழிக்கப்பட்டார். இது சர்வசேதக் கடற்பிராந்தியத்தியச் சட்டத்தை மீறும் செயலெண ஆந்திரப் பிரதேசத்தின் உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது இந்திய மக்கள் அறியாதது அல்ல.

(ஈ. நடராஜா - ஐ.நா. சபை முன்னாள் ஆலோசகர்)

## பயங்கரவாதம் எது?

எந்த அமைப்பு பயங்கரவாத அமைப்பு? எது பயங்கரவாத அமைப்பு இல்லை எனத் தீர்மானிப்பதற்கு அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் இல்லை. தனது நலனுக்காகப் புலிகளைப் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தியுள்ள அமெரிக்கா, விடுதலைப் புலிகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தீர்மானித்தால் அந்த நிலைப்பாட்டடை மாற்றிக்கொள்ளும். தமது அரசியல் நலன்களுக்காக அமெரிக்கா அரசு எதையும் செய்யக்கூடியது. இங்கு விடுதலைப்புலிகளைப் போலத்தான் பாலஸ்தீனத்தில் ஹமாவையும் பயங்கரவாதிகளென முத்திரை குத்தியுள்ளனர்

(அமெரிக்க ஜனாதிபதி
வேட்பாளர் பில்வான் ஓகென்)

## இந்தியர்களின் சமயம்

தமிழ் மக்கள் ஐரோப்பியர் வரவுக்கு முன்னர் இந்தியரென வழங்கப்படாவிடினும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் இந்தியாவுடன் தமிழ்நாடு இணைக்கப்பட்டு இந்தியர்கள், இந்துக்கள் முதலான பேர்களைப் பெற்றனர். ஐரோப்பியர்களும் இஸ்லாமியர்களும் வருவதற்கு முன்னர் இந்தியாவில் வழிவழியாக வாழ்ந்து வந்த ஆரிய திராவிட மக்கள் பின்பற்றிய சமயங்கள் எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து அவைகளுக்கு ஒரு புதுப்பெயரைப் பின்னர் வந்தவர்கள் ஏற்படுத்தினர். அதுவே இந்திய மக்களின் சமயம் என்பதன் சுருக்கமான இந்து சமயம் என்பதாகும்.

(ஆராய்ச்சியாளர்
டாக்டர் மு. தெய்வநாயகம்)

## புதிய பூமராங்

ஜனாதிபதி என்ற நிலையில் மனம் திறந்து இவற்றை வெளியிடுகிறேன். சில பொலீசார் மாதாந்தம் 10 லட்சம் ரூபாய் சம்பாதித்துள்ளனர். 90% பொலீசார் தமது கடமைகளைச் சரிவரச் செய்வதில்லை. கடமைத் துஷ்பிரயோகமே இவர்களின் நேர அட்டவணையாக உள்ளது. பொலீசாருக்கு 30% சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுத்திருந்த போதும் மாடு ஏற்றி வந்த லொறியில் கப்பம் பெற்ற பொலீசாரை எனக்குத் தெரியும். இதே வேளை நீதித் துறையில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெறுகின்றன. தமக்குத் தேவையானவர்களைக் காப்பாற்றவும் அரசியல்வாதிகளுக்கு அடிமைப்பட்டு தீர்ப்பு பெற்றுக்கொடுக்கும் நிலையும் உருவாகி இருக்கிறது. குற்றவாளிகளைக் காப்பாற்றும் நிலையங்களாக நீதிமன்றமும் பொலீஸ் நிலையங்களும் இயங்குவதாகப் பலர் எழுத்து மூலம் முறைப்பாடுகளை எனக்குச் சமர்ப்பித்துள்ளனர்."

(இலங்கை ஜனாதிபதி - 10 ஆண்டுகள் மேற்படி
துறைகட்குப் பொறுப்பாளராய் இருந்தவர்)

## யதார்த்தமான ஒரு சிந்தனை!

தமிழ் மக்கள் ஒரு தலைப்பட்சமாக போரை ஆரம்பிக்கத் தேவையில்லை. அந்த வேலையை இப்பொழுதே ஸ்ரீ லங்காப் படைத்துறையின் உளவியல் போர்ப் பணியகம் தொடங்கி முன்னெடுத்து வருகிறது. இது நாளை எம்மீது முழுமையாக பாயும் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமல்ல போர்நிறுத்தம் ஏற்பட்டதிலிருந்து இன்று வரை ஐ.தே கட்சியும் ஸ்ரீ.சு. கட்சியும் இலங்கையின் இராணுவச் சமநிலையை சிங்கள தேசத்தின் பக்கம் சாய்ப்பதிலேயே பேரவாக் கொண்டு செயற்பட்டு வருகின்றன என்பது கண்கூடு. நாம் இன்று அனுபவிக்கும் உரிமைகள் அனைத்துமே பேசிப் பெற்றவையல்ல, அடித்துப் பெற்றவையே எனப் போர்நிறுத்தம் ஏற்பட்ட காலத்தில் நான் திருமலையில் பேசியதை தினக்குரல் முன்பக்கத்தில் வெளியிட்டதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கால் நூற்றாண்டுக்கு மேலாக சட்ட வல்லுனர்களான எமது தமிழ் அரசியல்வாதிகள் எவ்வளவோ பேசிப் பார்த்தும் நீக்கப்படாத பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சிங்கள தேசம் இறுதியாக எமது படைபலத்தை அஞ்சியே தற்காலிகமாக நீக்கவேணும் உடன்பட்டதென்பதை நாம கவனிக்க வேண்டும். நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகிறேன். அதற்காக எந்த அழிவையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் ஓடி ஒளியமாட்டேன். எமக்குத் தேவையான கருத்துக்களை விவாதிப்பதற்கான களத்தை மேலும் விரிவாக்குவதற்கு தினக்குரலுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டு செல்லும் சூழலில் புலிகள் தமது மரபுவழிப் படைபலத்தைச் சிதைவின்றிப் பேணுவதற்கு தமிழ் சமூகத்தை எந்தளவிற்கு அரசியல் மயப்படுத்த தயாராயிருக்கிறார்கள் என்ற கேள்வியே இலங்கையின் இராணுவச் சமநிலையை எமக்குச் சாதகமாக வைத்திருப்பதற்கு முக்கியமானதாகிறது.

(டி. சிவராம் - ஊடகவியலாளர்)

## ஆச்சரியமான அனுபவம்:

அண்மையில் நான் தென்னிந்தியா சென்ற வேளை திருநெல்வேலி நகருக்குச் சென்றிருந்தேன். அங்கு சென்ற வேளை வீட்டிற்காகச் சாமான்களை வாங்கக் கடை வீதிக்குச் சென்றேன். கடையில் பொருட்களைக் கொள்வனவு செய்தபின் பணத்தைக் கொடுக்கக் காசாளரிடம் சென்று பணத்தைக் கொடுத்த போது அவர் மேசை மீதிருந்த கண்ணாடியைப் பார்த்த நான் திகைப்படைந்தேன். அதன் கீழ் ஒரு படம். அதிலிருந்தவர் வேறு எவருமில்லை. தமிழீழத்தின் தேசியத் தலைவரே. அந்த உரிமையாளரிடம் பேச்சுக் கொடுத்தேன். " என்ன ஐயா இந்தப் படம்? " என்றேன் என்னலே அப்படி கேட்டுப்புட்டே, எங்க - உங்க தலைவரில்ல இது அவர். " இங்கக் தடையிருக்கே பிரச்சனையில்லையா? " என்று கேட்டேன். " இல்லலே! போலீஸ்காரன் வந்து புடிக்கட்டும்லே! நம்ம நாட்டுத் தலைவனுங்கள விட, இவன் தான்லே தலைவன் " என்று பதில் வந்தது. தடை விதிக்கப்பட்டால் என்ன ஒரு நாட்டின் சாதராணக் குடிமகன் ஒருவன் தேசியத் தலைவர்பால் கொண்டுள்ள அபிமானம் இந்தச் செய்கையிலிருந்து விளங்குகிறது.

(எஸ். ஆர். எஸ். நாதன் - தினக்குரல்)

வெம்பிளி, ருட்டிங்கில்

# GLOBAL

## EXCHANGE LTD

Money Transfer to All Over the World

## குளோபல்

எக்சேஞ்ச் லிமிடெட்

உலகத்தின் எப்பாகத்திற்கும்
பணம் அனுப்ப
நம்பிக்கையான நிறுவனம்

54, Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 3366
1081, Garrat Lane, Tooting
London SW 17 OLN

வோல்த்தம்ஸ்ரோவில்

## Shree Jewellers

வைரத்தாலிக்கொடிகள்,
சங்கிலிகள், காப்புகள், தோடுகள்,
மோதிரங்கள், நவரத்தினங்கள்,
நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

**ஸ்ரீ ஜுவல்லர்ஸ்**

வாரத்தின் ஏழு நாட்களும் கடை
திறந்திருக்கும் சாத்திர விதிப்படி,
பொருத்தமான நவரத்தின கற்கள்
பதித்து மோதிரம், பென்ரன், தோடு செய்து தரப்படும்

110, Hoe Street
Walthomstow
London E17 4QS
Tel : 020 8509 7588

வோல்த்தம்ஸ்ரோவில்



## KUMARANS

குமரன்ஸ்

TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

ருட்டிங்கில்

## Yhaal House

சுத்தம், சுவை, தரம் மிக்க இலங்கை, இந்திய உணவு வகைகளை
எந்நேரத்திலும் எவ்வளவு தேவையாயினும் குறைந்த விலையில்
குன்றாத மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

1, London Road, Tooting
London SW17 9JP
Tel : 020 8767 8585



ருட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

## Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மனங்கவரும் மளிகைச்சாமான்கள்,
மென்பானங்கள், மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற எம்மை நாடுங்கள்

118, Tooting High Street,
London SW 17 0RR
Tel : 020 8682 3777



539 A வெம்பிளியில்

## ANGLO ASIAN CASH & CARRY

ENGLISH - ASIAN & AFRO CARIBBEAN GROCERY
FROZEN FOOD - FRUIT & VEG

TEL 020 8900 0444 அங்லோ ஏசியன் தமிழ்க்கடை TEL 020 8900 966

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane
Kingsbury NW9 8JB
Tel : 020 8200 1555 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road , Wembley HA0 2DN
Tel : 020 8900 0444 Fax : 020 8900 9666
Mob : 07956 425 707 web :www.angloasiangroup.uk

## ANGLO ASIAN

LONDON-COLOMBO COLOMBO-LONDON

Those willing to send parcels from Colombo to London
and from London to Colombo by
Air or by Sea are requested to
contact us for such services at reduced Rates

**ANGLO ASIAN MINI MART**
*513, High Road,*
*Wembley HA0 2DN*
Tel : 020 8900 2451 Fax : 020 8903 8202
Mob : 07956 425 707

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



## சமாதானம்

வார்த்தைக் கடிதங்களுக்குள்
இல்லாமல் இருப்பது
இதயத்தின் விலாசம் !
உட்கார்ந்திருப்பதோ

உதடுகளின் முத்திரை!
சூரியனும் சந்திரனும்
சுற்றிச் சுற்றி வருவது
நீபட்ட
காயங்களையெல்லாம்
கணக்கெடுக்கத்தான்

திடீர் திடீர் என்று
உன்னை நோக்கி
வீசப்படுவதெல்லாம்
வெடிகுண்டுகள் அல்ல....
விழிப்பு மாத்திரைகள்!

அழகான புன்னகைகளை நம்பி
ஆயுதங்களைக் கீழே போடாதே !
உலகம் உன்னைத்
தாக்குவதற்காகத்தான்
தருணம் பார்த்திருக்கிறது.

உறைக்குள் வாளை
ஒருநாளும் போடாதே !

சமாதானப் புறா
பறக்க முடியாது –
துப்பாக்கி முனைகளின்
துணையில்லாமல் !

– கவிஞர் மு. மேத்தா

## மெதுவாய் !

மிதியடிச் சத்தத்தை
மிதப்படுத்து
அழைப்பு மணியோ
கதவு தட்டலோ
யோசித்து – பின்
மெதுவாய் எழுப்பு!
' யார் வீட்ல ' என
கேட்கும் முன்
குரலை
மென்மையாக்கு,
நீ நுழையும்
எந்த வீட்டினுள்ளும்
ஒரு குழந்தை
தூங்கிக்கொண்டிருக்கலாம் !

–கவிதாயினி அ. வெண்ணிலா

## இன்பம் பெறுக !

நான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம் !
வான்பற்றி நின்ற
மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற
உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத்
தலைப்படும் தானே !

– திருமூலர் திருமந்திரம்

## நோயும் மருந்தும் !

நீற்றினை அணிந்தது என்
இன் இறைவன் என்றே
சாற்றினை உயிர்க்கிடர்
தணிப்ப என எண்ணாய்
தோற்றியுள தம் புதல்வர்
துன்பமுறு மந்நோய்
மாற்றும் வகை அன்னையர்
அருந்திய மருந்தாம்

–வள்ளலார் சுவாமிகள்

## தாயகம்

வளமுண்டா
உன்
மண்ணில்?
வாழ்வாயா
தனித்து
என்கிறாய்...

என்
நாட்டின்
துயரங்கள்
பற்றி
என்னிடம்
பேசாதே

பாலைவனத்தின்
இனிமை
பற்றி
ஒட்டகத்திடம்
கேள்

–கவிஞர் காசி ஆனந்தன்



## தமிழ் இனிமை!

வடநாட்டார் போன்ற உடை
வடநாட்டார் மெட்டு
மாத்தமிழர் நடுவினிலே
தெலுங்கு கீர்த்தனைகள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்
ஆங்கிலப் ப்ரசங்கம்
வாய்க்கு வரா இந்துஸ்தான்
ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும்
கழித்துப்பார்க்குங்கால்,
அத்திம்பேர் அம்மாமி
எனுந் தமிழ்தான் மீதம்!
கடவுளர்கள் அட்டைமுடி,
காகிதப்பூஞ்சோலை
கண்ணாடி முத்துவிடம்
கண்கொள்ளாக் காட்சி

– பாவேந்தர் பாரதிதாசன்

## அகிம்சை!

உதை
எலும்பு
நொறுங்க

வெட்டு
கைகள்
உதிர

சுடு
இதயம்
சிதற

ஆயுதத்திடம்
கேள்
அகிம்சை
புரியும்

– கவிஞர் அறிவுமதி



## ஊக்கமுடைமை

*'' பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை*
*வெரூஉம் புலிதாக் குறின் ''  (குறள் : 599)*

விலங்குகளிலெல்லாம் பருத்த உடம்பினையும் கூரிய தந்தங்களையும் உடையது யானை. இருப்பினும் யானைக்குப் போதிய ஊக்கமின்மையால் தன்னைவிட ஊக்கமுள்ள புலி தாக்குமானால் அதற்கு அஞ்சும். ஏனைய வலிமையெல்லாம் இருப்பினும் ஊக்கமில்லாத அரசர் அதனையுடையவர்க்கு அஞ்சுவர்.

*'' உரமொருவர்க்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்*
*மரம்மக்க ளாதலே வேறு ''  (குறள் : 600)*

ஒருவருக்கு ஊக்கமிகுதியே அறிவுடைமையாகும். அவ்வூக்கம் இல்லாதவர் மரத்ததிற்குச் சமமானவர். இவர்கள் மக்கள் வடிவாகத் தோன்றுதல் ஒன்றே மரத்திற்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடாகும்.

## திருவண்ணாமலை

நினைக்க முக்தி தரும் திருத்தலமென்று அழைக்கப்டுவது அண்ணாமலை. இங்கு எழுந்து அருளியுள்ள சிவபெருமான், அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார், சோணாசலர் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார். வேறு எங்கும் இல்லாத சிறப்பாக மலையே சிவனாக வணங்கப் படுகிறது. இதனால்தான் இங்கி கிரிவலம் நடைபெறுகிறது. இங்கு கார்த்திகை பெருவிழா பத்து நாட்கள் நடைபெற்று, பத்தாவது நாள் கார்த்திகை தீபம் ஏற்றப்படும். லட்சோப லட்சம் மக்கள் இதை நேரடியாக காண்பார்கள். இந்த பெருவிழாவில் ஐந்தாவது திருவிழா வெள்ளி ரிஷப வாகனம். இது ஒரு அற்புதமான காட்சி, 2004இல் கார்த்திகை மாதம் நடந்த உற்சவத்தை அட்டையில் காண்கிறீர்கள்.

( திருவண்ணாமலை சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலை 45ல் சென்று திண்டிவனத்தில் இருந்து செஞ்சிக் கோட்டை வழியாக திருவண்ணாமலையை அடையலாம். சென்னையிலிருந்து 181 கிலோ மீட்டர் மட்டுமே. சென்னையிலிந்து வேலூர் சென்று போளூர் மார்க்கமாக திருவண்ணாமலையை சென்றடையலாம். பேருந்துல் நாலரை மணி நேர பிரயாணம். )


# பொங்கல் மலர்

240 பக்கங்கள்
30 ஈழத்து சிறுகதைகள்
10 கட்டுரைகள்
10 வர்ணப்படங்கள்

தை மாதம் மாத தகவல் வெளிவராது. தமிழர் தகவல் பொங்கல் மலரின் பக்கங்கள் அதிகமாக இருப்பதால் தபாலில் அனுப்பி வைக்க இயலாது.
கீழ் கண்ட இடங்களில் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும்.

கடந்த 19 மாதங்கள் இலவசமாக பெற்ற தமிழர் தகவலின் பொங்கல் மலர் £ 4.00 மட்டுமே

| | | | |
|---|---|---|---|
| Croydon | JK Gold House & Fashion House Ltd | Wembley | Global |
| Tooting | Sharon | Walthamstow | Shree Jewellers |
| Croydon | Mithus Jewellery | Tooting | Yaal House |
| Tooting | Prime Food & Wine | Wembley | Anglo Asian |
| Harrow | Best Food | | Cash & Carry |
| Hounslow | Best Food | Harrow | M.K. Sri & Co |
| West Croydon | Best Food | Croydon | Link Air |
| Wembley | Vahizan Disc World | Lewisham | Katpakam |
| Wembley | Tharani Jewellery | Lewisham | Eelam Shop |



அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

# M. K. SRI & CO

SOLICITORS & ADMINISTRATORS OF OATHS

RESIDENTIAL/COMMERCIAL CONVEYANCING ✤ IMMIGRATION AND NATIONALITY
EMPLOYMENT DISPUTES ✤ MATRIMONIAL / FAMILY
WILLS AND PROBATE ✤ WORK PERMIT
HOUSING ✤ CRIME

Tel : 020 8515 7000 (4 lines) Fax : 020 8515 7030
Partners : M.K. SRITHARAN, S. SIVASANTHIRAN

NO. 1 CENTRAL PARADE STATION ROAD
HARROW MIDDLESEX HA1 2TW
Website : www.mksri.co.uk E-mail : info@mksri.co.uk
DX : 4234 HARROW (1)


கண்ட கண்ட இறக்குமதி செய்த குப்பை நாட்காட்டிகளை வாங்காமல் சிவசக்தி நாட்காட்டியை வாங்குங்கள்

# வந்தவர் வென்றவர் வரிசை

வந்தவர் வென்றவர் வரிசை

இந்த பத்தியில் பேசப்படும் இரண்டாவது தெரிவு புலம் பெயர்ந்து லண்டனுக்கு வந்து தன்னை நிலை நாட்டிக் கொண்ட வே. சிவசுந்தரம் பற்றியது.

திரு. சிவசுந்தரம் ஈழத்தில் ஆவரங்கால் – கிரமத்தில் பிறந்து சோமஸ் கந்தா கல்லூரியில் க.பொ.த உயர்தரம் படித்து இலங்கை பொது எழுது வினைஞர் சேவையில் சேர்ந்து வருமான வரி திணைக்களத்தில் சேவை புரிந்தார்.

இவரின் வாழ்வின் இனக்கலவரம் பெரிய மாறுதலை கொண்டுவரும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

புகலிடம் கோரி ஈழமக்கள் உலக நாடுகளுக்கு ஓடியபோது சிவசுந்தரம் லண்டன் வந்தார்.

லண்டனில் வாழ்வதற்கான வழி தெரியாமல் தவித்தபோது மீண்டும் ஈழம் போய்விடலாம் என்ற நிலையும் ஏற்பட்டது.

இவரின் மனஉறுதி சிறிய மதுபானக் கடையில் விற்பனையாளராக பணி புரிந்தார். உழைப்பால் உயரவேண்டும் என்ற நிலையில் அந்த காலத்தில் ஈழமக்கள் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத, தங்க நகை வியாபாரத்தை லண்டனில் தொடங்கிய வரலாறு இவருடையதாகிவிட்டது.

இன்று லண்டனில் பல நகை வியாபாரங்கள் வீதிக்கு வீதிக்கு ஆரம்பிக்கப்பட்டாலும் வெஸ்டன் ஜுவலர்ஸ் தனி செல்வாக்குடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதற்கு இவரின் மனைவியின் அயராத உழைப்பும் – ஒரு காரணம். அதன்பின் ஒரு பட்டுப்புடவை வியாபாரம் – **SILK EMPORIUM** என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி நடை போடுகிறது.

பொருத்தம் இல்லாத இடங்களில் பணத்தை வாரி இறைத்து கடைகளைத் திறக்கும் நம்மவர் மத்தியில் வித்தியாசமானவர் சிவசுந்தரம். தனது இரண்டாவது கிளை நிறுவனத்தை நகை கடைகள் அதிகம் உள்ள வெம்பிளியில் திறந்து வெற்றி பெற்றிருக்கிறார். இது நம்மவருக்கு பெருமை.

வெம்பிளியில் நகை மொத்தமாக விற்பனை செய்யும் தமிழ் வியாபாரி ஒருவர் கூறுகிறார். வெஸ்டன் ஜுவலர்ஸால் எங்களுக்கு தாக்கு பிடிக்க முடியாது போல் இருக்கிறது.

இவர் வெற்றிக்குக் காரணம் இவரின் விளம்பர முறை. இவரின் நிறுவனம் ஆரம்பித்த அன்று முதல் இன்று வரை புதினம் பத்திரிகையில் இடைவெளி விடாமல் முதல் பக்கத்தில் விளம்பரம் தொடருகிறது. இது ஒரு பெரிய விளம்பர சாதனை. லண்டனில் எந்தப் புத்தகம் எந்த நிகழ்ச்சி எந்த விளையாட்டு எதுவானாலும் இவரின் விளம்பரங்கள் இல்லாத ஊடகங்களே இல்லை எனலாம்.

தாயகத்திலும் தர்ம காரியங்கள் செய்வது இவருக்கு நித்திய கடமையாகிவிட்டது. ஆவரங்கால் கிரமத்தில் இவர் அமைத்த கல்யாணமண்டபத்தை தாயகம் சென்று வந்தவர்கள் வியந்து பேசுகிறார்கள்.

இவரின் வெஸ்டன் ஜுவலர்ஸ் லண்டனில் பேசப்படுவது இவருக்கு கிடைத்த வெற்றி. இந்த வெற்றிக்கான முக்கிய காரணம் சிவசுந்தரத்தின் புன்னகை பூத்தமுகம். பழகும் முறை. இனிமையான அணுகுமுறை. யார் எதை சொன்னாலும் ஏற்கும் பழக்கம். பணம் கிடைத்த பின் ஏற்படும் செருக்கு இவரிடம் காணப்படவில்லை.

பிறருக்காக ஒரு ஆன்மிக ஆலயத்தை உருவாக்கிக் கொடுத்தவர். அந்த ஆலயமே அவருக்கு எண்ணற்ற வேதனைகளையும், சோதனைகளையும் கொடுத்தது எனினும் தன்னுடைய தர்ம காரியங்களிலிருந்து பின்வாங்கியதில்லை.

நா. சிவானந்த ஜோதி

கண்ட கண்ட இறக்குமதி செய்த குப்பை நாட்காட்டிகளை வாங்காமல் சிவசக்தி நாட்காட்டியை வாங்குங்கள்

# LinkAIR Travels Limited



IATA 91-2 5704 0

SriLankan

**Special Fares to : Colombo, Madras, Singapore, Canada**

**We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO**

361 London Road, Croydon, Surrey CRO 3PB

Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்



புதிய பொலிவுடன்
லூசியத்தில்



# கற்பகம்

# Katpakam

**36, Loampit Hill, Lewisham**
**London SE 13 7SW**
**Tel / Fax : 020 8694 8810**

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி
சகலவிதமான மரக்கறி வகைகள் பழவகைகள்
உட்பட சகல தேவைகளுக்கும்
நாடவேண்டியஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன் – இலண்டன்



இலண்டன் மாநகரில்

# GALAXY NEWS

உங்களுக்குத் தேவையான விரும்பிய
நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
**Mr. K. Alagan**

Galaxy News
**84, Brooks Croft Road**
**London E17 4JR**

**Tel : 07958 360 176**
**Fax : 020 8527 2324**



# ஒரு புனிதமான இடம்

## தென்கச்சி – சுவாமிநாதன்

ஒரு ஊரிலே இரு சகோதரர்கள் இருந்தார்கள். அதாவது அண்ணனும் தம்பியும்

அந்த இருவரில் அண்ணனுக்குத் திருமணம் ஆகிவிட்டது.

தம்பிக்குத் திருமணம் ஆகவில்லை.

வேண்டாம் என்று இருந்து விட்டான். அவர்கள் இருவருக்கும் சொந்தமாகக் கொஞ்சம் நிலம் இருந்தது. நன்றாக விளையக் கூடிய நிலம்

அப்பா அவர்களுக்கென்று விட்டுப்போன சொத்து அந்த நிலம்.

அண்ணனும் தம்பியும் அந்த நிலத்தை இரு பிரிவாகப் பிரித்துக்கொண்டு விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள்.

அடுத்தடுத்த தெருக்களில் இரு வீடுகளில் அவர்கள் தனித்தனியே வாழ்ந்தார்கள்.

அண்ணன்காரன் கல்யாணம் ஆனவன். அவன் நினைப்பான்.

'' எனக்கு மனைவி மக்கள் இருக்காங்க. அதனால கடைசிக் காலத்துல நம்மைக் காப்பாத்துறதுக்குப் பிள்ளைங்க இருக்காங்க. முதுமையில நமக்குப் பாதுகாப்பு உண்டு. ஆனா... தம்பிக்கு யாருமே இல்லை. அவன் தனி ஆள். அவனுக்கு வயசானா அவனைக் கவனிக்கிறதுக்கு யாருமே இல்லை. அதனால அவன்தான் அதிகமாப் பணம் சேர்க்கணும். அதுக்கு நாமதான் எப்படியாவது உதவ பண்ணனும். ''

இப்படியாக அண்ணன்காரன் நினைப்பான்.

அதற்கு என்ன செய்யலாம் என்று யோசிப்பான்.

ஒருநாள் இரவு ....

ஒரு சாக்கு நிறைய நெல்லைக் கட்டி எடுத்துக் கொண்டான். தலையில் சுமந்துகொண்டு தெருவில் இறங்கினான். இரகசியமாகத் தம்பியின் வீட்டுக்குப் போனான். அங்கே வீட்டுக்குப் பின்பக்கம் இருந்த களஞ்சியத்தில் நெல்லைக் கொட்டிவிட்டு யாருக்கும் தெரியாமல் திரும்பி வந்து விட்டான்.

தம்பியிடம் அதை நேராகக் கொடுத்தால் அவன் வாங்க மாட்டான்.

ஆகவே இப்படி ரகசியமாக இந்த வேலையைச் செய்தான்.

இந்த மாதிரி அடிக்கடி செய்வதை இவன் வழக்கமாகக் கொண்டிருந்தான். இந்த நேரம் ....

தம்பிகாரன் என்ன யோசனை பண்ணினான் தெரியுமா ?

' நாமோ தனி ஆள். ஆனால் அண்ணன் குடும்பமோ பெரிசு. அதனாலே எனக்கு அதிகம் தேவையில்லை. அண்ணனுக்குத்தான் தேவை அதிகம். அவருக்கு நாமதான் ஏதாவது உதவி செய்யணும் ' என்று நினைத்தான்.

ஆனால் என்ன செய்வது ?

நேரில் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டாரே...

ஆகவே இவனும் இரவோடு இரவாக நெல் மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டு புறப்பட்டான்.

யாருக்கும் தெரியாமல் அண்ணன் வீட்டுக்குப் போனான். அங்கே பின்புறம் இருந்த களஞ்சியத்தில் கொட்டிவிட்டுத் திரும்பி வந்து விட்டான்.

இதே மாதிரி இவனும் அடிக்கடிச் செய்து கொண்டிருந்தான்.

அதாவது ....

அண்ணன் நல்லாயிருக்கணுமே என்று நினைத்துத் தம்பிக்காரன் கொண்டு வந்து தானியத்தைக் கொட்டுகிறான். தம்பி நல்லாயிருக்கணுமே என்று அண்ணன்காரன் கொண்டு வந்து தானியத்தைக் கொட்டுகிறான். இது ஒருத்தருக்கொருத்தர் தெரியாமல் தொடரந்து நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் என்ன ஆயிற்றுத் தெரியுமா ?

நடு இரவு ....

அண்ணன்காரன் படுக்கையை விட்டு எழுந்தான்.

வழக்கம் போல் நெல் மூட்டையைத் தலையில் வைத்துக் கொண்டு தம்பி வீட்டுக்குப் போகிறான்.

அதே நேரம் ....

தம்பியும் எழுந்தான். நெல் மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டு அண்ணன் வீட்டுக்குப் போகிறான். இரு தெருவும் சந்திக்கிற ஒரு இடத்திலே இருவரும் மோதிக் கொள்கிறார்கள். அப்போதுதான் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரிந்தது.

'' அடேடே ... தம்பி நீயா ? ''

'' ஆமாண்ணே .... நீங்களா ? ''

நீண்ட காலம் ரகசியமாய் நடந்து கொண்டிருந்த இச்செயல் இப்போது வெளிச்சத்துக்கு வந்தது. இருவருமே நடந்த உண்மையைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் கண்கள் அன்பின் மிகுதியால் கலங்கின. அவர்களின் பாசம் மிகுந்த கண்ணீர்த் துளிகள் நிலத்தில் விழுந்தன.

இந்த நிகழ்ச்சி நடந்து வெகுகாலம் கழித்து அந்த ஊரில் ஒரு கோயில் கட்ட வேண்டியிருந்தது. அதற்கு இடம் தேடினார்கள்.

எந்த இடத்தில் ஆலயம் எழுப்புவது ?

அதற்கு ஒரு புனிதமான இடம் தேவைப்பட்டது. ஊர்ப்பெரியவர்கள் கூடினார்கள். என்ன செய்வது என்று ஆலோசனை நடத்தினார்கள். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அண்ணனும் தம்பியும் நடு இரவில் சந்தித்துக் கொண்டார்களே... அவர்களின் கண்ணீர் நிலத்தில் விழுந்ததே.... அந்த இடம்தான் புனிதமான இடம் என்று முடிவு பண்ணினார்கள்.

அங்கே ஒரு அழகான ஆலயம் உருவாயிற்று.

சிறகை விரிக்க விரும்புபவர்கள் இந்தக் கதையைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் காலத்தில் சகோதர பாசம் இப்படியா இருக்கிறது ?

ஒருத்தன் சொன்னான் ....

'' எங்க வீட்டில பங்கு பிரிச்சப்போ .... ' எனக்கு எதுவுமே வேண்டாம் .... எல்லாத்தையும் எங்க அண்ணன்கிட்டயே கொடுத்துடுங்க ' ன்னு சொல்லிப்புட்டேன். ''

'' பரவாயில்லியே .... உங்க அப்பா விட்டுட்டுப் போனது எவ்வளவு இருக்கும். ''

'' அது சுமாரா ஒரு ஐம்பதாயிரம் இருக்கும். ''

'' என்ன சொத்தா ? ''

'' இல்லீங்க கடன் ! ''

# MARKANTAN & SHARMA
## SOLICITORS & COMMISSIONORS FOR OATHS

**CONVEYANCING SPECIALIST**
Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration

**We Win No Fee Basis**
**Employment Law**
**Personal Injury**

**IMMIGRATION SPECIALIST**
Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates

AFFORDABLE RATES ! We are Open on Saturdays

BOW BUSINESS CENTRE 153-159 BOW ROAD LONDON E3 2SE
TEL : 020 8981 5330 FAX : 020 8981 5350 MOBILE : 07956386576
Email : markandan@mssolicitors.com

THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT

“ அறுசுவை பதார்த்தங்கள் அனைத்தையும்
உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம் ”

## EELAM SHOP

**406 - 408 Lewisham High Road**
**Lewisham London SE 13 6LJ**
**Tel : 020 8690 3392 - 6902617**

**EELAM SHOP**
**399 Lewisham High Street**
**Lewisham**
**London SE13 6NZ**
**Tel : 020 8690 6545**




## MEERA GOLD SMITH
*Gems & Jewellery*
896 Garratt Lane, Tooting, London SW17 0NB
Tel : 020 8767 2616
Mob : 07958 948 685
www.meera_jewellery.com



பழைய தங்கத்தில்
புத்தம் புதிய நகைகள்
செய்து கொள்ள, அதிர்ஷ்ட
நவரத்தின கற்களை நியாய
விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான
22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள

**MEERA GOLD SMITH**
தங்கம் வாங்கும்பொழுது தங்கம்
தெரிந்தவர்களிடம் வாங்குங்கள்

**MEERA GOLD SMITH**
பிரமாண்ட காட்சியறை இல்லை ஆனால்
பிரமிக்க வைக்கும் கலைவண்ணம் வடிக்கும்
நகைச்சிற்பிகளின் கலைக்கூடம்



# சங்கராச்சாரியார் கைது தண்டனையிலிருந்து தப்புவாரா ?

அன்றைய அதிகாலையில் அப்படியொரு செய்தியை எவரும் எதிர்பார்க்கவில்லை.

தீபாவளியன்றுதான் சங்கராச்சாரியார் பல்வேறு தொலைக்காட்சிகளிலும் தோன்றி அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார். மறுநாளே மீண்டும் அவர் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் தோன்றியது அருளுரை வழங்குவதற்காக அன்று.

ஈழத்தைப் போலன்றி, தமிழகத்தின் சமூகப் பண்பாட்டு அரசியல் வேறு விதமானது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே, பார்ப்பனர், பார்ப்பனரல்லாதோர் முரண்பாடு தமிழகத்தில் வேரூன்றியுள்ளது. தமிழகப் பொருளாதாரம், அரசியல் அனைத்தும் அதன் அடிப்படையிலேயே இங்கு முடிவாகின்றது.

எனவே, சங்கராச்சாரியார் கைது, தமிழ்நாட்டில் இருவிதமான எதிர்விளைவுகளை உருவாக்கியிருந்தது. எதிர்பாராத அதிர்ச்சி, குழப்பம், கோபம் ஆகிய உணர்வுகளுக்குப் பலர் ஆட்பட்டனர். இன்னொரு புறத்தில் எதிர்பாராத மகிழ்ச்சி, கொண்டாட்டமும் இடம் பெற்றன. செய்தி வெளியான சில மணி நேரத்திற்குள்ளாகவே, காஞ்சியில் உள்ள சங்கர மடத்தின் எதிரே நின்று, தப்படித்து, பறை முழக்கி, இனிப்பு வழங்கி ஒரு சாரார் தங்கள் மனமகிழ்வை வெளியிட்டனர். அவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, ஒருவர் தற்கொலையே செய்து கொண்டார். அந்த அளவிற்கு எதிர்வினையும் இருந்தது.

இருப்பினும், பிராமண சமூகத்தாரிடையே காணப்பட்ட கோபமும், கொந்தளிப்பும், பிற சமூகத்தினரிடம் இல்லை என்பதே உண்மை.

ஏதோ ஒரு வேகத்தில் அவர் கைது செய்யப்பட்டிருந்தாலும், ஓரிரு நாள்களிலேயே விடுதலை செய்யப்பட்டுவிடுவார் அல்லது பிணையிலாவது (ஜாமீன்) வெளிவந்துவிடுவார் என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர். அனைவரது எதிர்பார்ப்பையும் தமிழக அரசு பொய்யாக்கிவிட்டது. சங்கராச்சாரியாரின் மீது தமிழக அரசின் பிடி மேலும் மேலும் இறுகுவதையே பார்க்க முடிகிறது.

முதலமைச்சர் செயலலிதா மத நம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் உடையவர். நான் பார்ப்பனப் பெண்தான் என்று சட்டமன்றத்திலேயே வெளிப்படையாக அறிவித்தவர். சங்கரமடத்திற்கும் சென்று வருபவர்.

இப்படிப்பட்டவர் எதற்காக அவரைத் திடீரென்று கைது செய்தார் என்ற கேள்வி பலருடைய நெஞ்சையும் அரிக்கவே செய்கிறது. பணம் கொடுக்கல் வாங்கலில் அல்லது ஏதோ ஒரு தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில்தான் இவ்வாறு நடந்துள்ளது என்று விஸ்வ இந்து பரிசத் அமைப்பும், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனும் கூறியுள்ளனர். தி.மு.க.வின் தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் அதை வழிமொழிந்துள்ளார்.

காரணம் எதுவாயினும், செயலலிதாவின் நடவடிக்கை மிகவும் துணிச்சலானது என்னும் கருத்துப் பரவலாகப் பொதுமக்களிடையே உள்ளது. அதனால் அவருடைய செல்வாக்கும் ஓரளவு கூடியுள்ளதை மறுக்கமுடியாது.

நாத்திகரான கருணாநிதி கூட, இப்படித் துணிச்சலாக செயல்பட்டிருக்க மாட்டார் என்று பலரும் கூறுகின்றனர். உண்மைதான். அவர் ஆட்சியில் இருந்திருந்தால், சங்கராச்சாரியாரைக் கைது செய்திருப்பாரா என்பது சந்தேகம்தான். அதே வேளை, அவர் இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால், சங் பரிவாரங்களும், பாரதிய சனதாக் கட்சியினரும், மிகப் பெரிய கலவரங்களில் ஈடு பட்டிருப்பார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. இப்போது, செயலலிதாவின் செயலை ஆதரிக்கவும் முடியாமல், வெளிப்படையாக எதிர்க்கவும் முடியாமல் பா.ஜ.க. தடுமாறுவது நன்றாகவே தெரிகிறது.

இந்த அரசியல் சூழல்களெல்லாம், ஒரு புறமிருக்க, சங்கராச்சாரியார் மீதான குற்றச்சாட்டு தவறானது என்றோ, அவர் மீது தொடுக்கப்பட்டிருப்பது பொய் வழக்கு என்றோ அவருடைய ஆதரவாளர்களிடமிருந்து கூட ஒரு குரலும் எழவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

கொலைக் குற்றத்திற்கான ஆதாரங்கள் வலுவாக உள்ளனவென்றும், அரசியல் தலையீட்டினால் அவர் தப்பினால் தவிர வேறு வழியில்லை என்றும் வழக்குரைஞர்கள் கூறுகின்றனர்.

சங்கராச்சாரியார்கள் வழக்கமாக கையில் வைத்திருக்கும் ஒரு கம்பைத்தான் தண்டம் என்று கூறுவர். தப்பு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதும், பாவ மன்னிப்பு கூடாது என்பதும் இந்து மதத்தின் விதி. தண்டனையின் குறியீடாகவே அவர்கள் கையில் தண்டம் உள்ளது.

தண்டனை பிறருக்கு மட்டும்தானா அல்லது சங்கராச்சாரியாருக்குமா என்பதற்குக் காலம் விடை சொல்லும்.

*– தமிழகத்திலிருந்து செந்தாமரைக்கண்ணன்*



# மார்கழிப் பெருவிழா அழைப்பிதழ்

## அம்மாப்பேட்டை, சேலம் -3.

## 21-ஆம் ஆண்டு ஆன்மீக சொற்பொழிவு

**16-12-2004 முதல் 13-01-2005 வரை, தாரண வருடம் மார்கழி மாதம் 29 நாட்களும்**



16-12-2004



M.A., B.Ed.,
17-12-2004 to 26-12-2004



திரு. ஆறு. திருமுருகன்
27-12-2004 to 29-12-2004



M.A., M.Ed.,
30-12-2004 to 31-12-2004



திரு. அப்துல் காதர் B.Sc. M.A. M.Phil
1-1-2005 to 2-01-2005



அருள்நிதி. டாக்டர்.
3-1-2005 to 4-1-2005





கலைமாமணி டாக்டர்.
சாரதா நம்பி ஆரூரன் M.A., M.Phil., P.hd
5-1-2005 to 7-1-2005



சொல்வேந்தர் திரு. சுகிசிவம் B.A., B.L.,
8-1-2005 to 9-1-2005



10-1-2005 to 11-1-2005



இலக்கிய வேந்தர்.
திரு. தமிழருவி மணியன் M.A. B.L.
12-1-2005 to 13-1-2005



யாழப்பாணம் இனுவில் ஆறு. திருமுருகன் அவர்களின்

சமய சொற்பொழிவு மார்கழி மாதம்

தமிழ்நாடு, சேலத்தில்

மூன்று நாட்கள் நடைபெறும்

27.12.2004 முதல் 29.12.2004வரை

கண்ட கண்ட இறக்குமதி செய்த குப்பை நாட்காட்டிகளை வாங்காமல் சிவசக்தி நாட்காட்டியை வாங்குங்கள்

# குறுகத் தரித்த குறள்

சுப. வீரபாண்டியன்

ஆசையும், அச்சமும் இல்லாத மானுட வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்வது கூடக் கடினமாக உள்ளது. அவை இரண்டும்தான் மனிதர்களை ஆட்டிப் படைக்கின்றன.

" ஆசையே உலகின் அனைத்துத் துன்பங்களுக்குமான மூல காரணம் " என்னும் புத்த மொழி இன்றுவரை பொய்ப்பிக்கப்படவில்லை. அதே வேளை, ஆசைதான் மனிதர்களை இயக்குகின்றது என்பதையும் மறுக்க முடியாது. ஆசைகளற்ற மனிதன் சடப்பொருளாய் ஆகிவிடுகின்றான்.

அதைப் போன்றதுதான் அச்சமும்.

" அச்சமே கீழ்களது ஆசாரம் " என்று சொன்ன வள்ளுவர்தான், " அஞ்சுவது அஞ்சாமை பேதைமை " என்றும் கூறியுள்ளார்.

எனவே, ஆசைப்படுதலும், அஞ்சுதலும் மனித வாழ்வில் தவிர்க்கப்பட இயலாதன என்பதை உணர்கின்றோம். ஆனால், நீர்வழிப்படும் ஓடம் போல், நாம் எப்போதும் ஆசை வழிப்படும் மனிதர்களாகிவிடக் கூடாது.

வீடுபேறு, சொர்க்கம் நரகம் என்பனவெல்லாம் கூட, ஆசைகாட்டியும், அச்சமூட்டியும் மக்களை நல்வழிப்படுத்த எழுந்த கோட்பாடுகளாகவே இருக்கமுடியும். இறந்த பின்பு, நல்லவன் சொர்க்கம் செல்வான், தீயவன் நரகம் செல்வான் என்றும் நம்பிக்கை பலரிடமும் உள்ளது. சொர்க்கம், நரகம் ஆகியவை உண்மையா, பொய்யா என்னும் விவாதம் ஒருபுறமிருக்க, சொர்க்க ஆசையிலும், நரக அச்சத்திலுமேனும் ஒருவன் நல்லனாக இருக்க வாய்ப்பு உள்ளது என்பதுதான் வினைபயன்.

திருவள்ளுவர் மனிதனை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

பயன் இல்லையென்றாலும் நல்லது செய், மிகப் பெரும் பயன் கிடைக்குமென்றாலும் தீமை செய்யாதே என்கிறார் அவர்.

இத்தகைய அறிவு முயற்சி மிகக் கடினமானது, அதைத்தான் வள்ளுவர் மேற்கொண்டுள்ளார். நல்வழியில் அழைத்துச் செல்வதெனினும், அவனை ஆசைகாட்டி அழைத்துச் செல்ல வேண்டியதில்லை, அறிவுபுகட்டி யே அழைத்தல் வேண்டும் என்று அவர் கருதுகின்றார்.

" நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று "

என்னும் குறளையும்,

" வேண்டற்க வென்றிடினும் சூதினை "

என்னும் குறள் வரியையும் எண்ணிப் பார்த்தால், வள்ளுவர் உள்ளம் நமக்கு விளங்கும்.

சூதாட்டத்தினால் பொருள் இழப்பு நேரும், குடும்பம் வறுமையில் தவிக்க நேரிடும். ஆதலால் சூதாட்டம் வேண்டாம் என்றுதான் அறிவுரை கூறுவர். இது அச்சமூட்டித் திருத்தம் வழியாகும்.

வள்ளுவரோ, எதிர்மறையாக ஒன்றைக் கூறுகின்றார். ' வென்றிடினும் ' என்கின்றார். சூதாட்டத்தில் வெற்றியும் வரலாம், பொருளையும் பெறலாம். எனினும், வேண்டற்க சூதினை என்பதே அவருடைய அறிவுரை.

நல்லாறு எனினும் எனத் தொடங்கும் குறள், இரண்டு செய்திகளைக் கூறுகின்றது. நன்மை தருமென்றாலும் பிச்சையாய் எதையும் பெறக்கூடாது என்பதும், மேலுலகம் இல்லையென்றாலும், பிறருக்கு கொடுக்கும் குணத்தை விடக் கூடாது என்பதும் குறள் தரும் இரு மணிகள்.

பிச்சை பெறுவதில் என்ன நன்மையுண்டு, யார் அவ்வாறு கருதுகின்றனர் என்னும் வினாவிற்குப் பரிமேலழகர் உரையில் விடை உள்ளது.

" ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லநெறி என்பார் உளராயினும் அது தீது; ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று " என்பது அவர் உரை.

அடுத்தவேளைச் சோற்றுக்கு, ஒரு நெல்மணியையும் சேமித்துக் கொள்ளாமல், பிச்சை எடுத்தே பசியாற்றிக் கொள்ளும் ' பிக்ஷாந்தேகி 'களே மேலுலகம் செல்வர் என்னும் வைதீக நெறியை இத்திருக்குறள் மறுக்கின்றது. அவ்வாறே, " இம்மை செய்தது மறுமைக்காகவும் எனும் அறவிலை வணிகம்" போன்று, " புண்ணியம் வரும், மேலுலகம் செல்லலாம் " என்ற நம்பிக்கையில் ஈதல் மேன்மையானதன்று என்பதையும் இக்குறள் உணர்த்துகின்றது.

இரண்டு தத்துவங்களுகிடையேயான முரண்பாடுகளை இக்குறள் வரிகள் சுருக்கமாய்ப் பேசுகின்றன. சொற்கள் சுருக்கமாகவும், விவாதம் பெரிதாகவும் உள்ளது. குறுகத் தரித்த குறட்பாக்கள் அல்லவோ இவை.

# ஒரு உதயம் உதிர்ந்து போனது

" அப்போது நான் ஒரு சிறுவன், எனினும் ஒரு சம்பவத்தை என்னால் நினைவு கூற முடியும். ஒரு நாள் நள்ளிரவைத் தாண்டிய இரவு எங்கள் மாமா வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பிரிட்டிஷ் வீரர்கள் நுழைந்தார்கள். அவர்கள் எமது குடும்ப அங்கத்தார்களைக் கண்டபடி அடித்தார்கள். வீட்டு தளபாடங்களை அடித்து நொறுக்கினார்கள் ". இந்த நிகழ்வு நடந்தது ஜெருசெலத்தில் உள்ள ஒரு வீட்டில் இந்த வேதனையான அனுபவங்களைப் பெற்ற அந்த ஒன்பது வயது பாலகன் முகமட் அப்லெட் ரவூத் அராபத் என்ற பாலஸ்தீனத்தின் தன்னிகரற்ற தலைவர் அராபத். இதுதான் அவரது போராட்ட உணர்வின் ஆரம்பக் கீறல். 1929 ஆகஸ்ட் 29ஆம் தேதி கெய்ரோவில் பிறந்த அராபத் தன் ஐந்தாவது வயதில் அன்னையை இழந்த பின் ஜெருசேலத்தில் உள்ள அவரது மாமாவின் வீட்டில் வாழ நேர்ந்தது. அது அவரது சோகமான வாழ்வின் ஆரம்பம்.



அப்போது பாலஸ்தீனத்தின் தலைநகர் ஜெருசேலமாக இருந்தது. ஆங்கிலேயரின் ஆட்சிக்கும் உட்பட்டு இருந்தது. யூதர்களுக்கும் பிரிட்டிஷ்காரர்க்கும் எதிராகப் பாலஸ்தீனத்தில் எதிர்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் அப்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அது அராபத்தின் பதினேழாவது வயது.

அராபத்தின் பத்தொன்பதாவது வயதில் தன் பல்கலைக்கழகப் படிப்புக்கு முழுக்குப் போட நேர்ந்தது. போர்ட் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய அவர் போராட்டக் களத்திற்கு வந்தது அப்போதுதான். அன்றிலிருந்து தனது எழுபத்தைந்து ஆண்டுக்கால வாழ்வு வரை பாலஸ்தீனம் அவரது உயிர் மூச்சாகவே இருந்திருக்கிறது. பல சோதனைகள், வேதனைகள், காட்டிக் கொடுப்புகள், கொலை முயற்சிகள், குடும்ப வாழ்வின் இடர்பாடுகள் இவைகளையெல்லாம் இரகசியமாகவே ஏற்றுக் கொண்டவர். எவரிடமும் பகிர்ந்து கொள்ளாத ஒரு பக்குவம் அவர் வாழ்வில் இருந்து வந்திருக்கிறது. அது தான் அவரது தனித்துவம். 1964ல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆரம்பமான காலம் முதல் அவர் மாறி மாறி வதிவிடங்களைத் தேட வேண்டி வந்தது. எகிப்து, குவைத், ஜோர்டான், டுனிசியா, லெபனான், மேற்குகரை என அவர் வாழ்வின் பெரும்பகுதிகள் அலைக்கழிவுகளாகவே தொடர்ந்தன. அரபு நாடுகள் அனைத்தும் அவரது அயராத உழைப்பை மதிக்கவில்லை – மதிப்பது போல் நடித்தார்கள். ஆயினும் அந்நாடுகளை அவர் வெறுக்கவில்லை. தன் மக்களுக்காகத் தனித்து நின்றுதான் அவர் போராடினார். அவரின் பின்னால் மக்கள் படை இருந்தது – மகோன்னதமான இலட்சியமும் இருந்தது.

உலகின் ஒப்பற்ற தலைவனாக உயர்வு பெற்று நின்றபோதுதான் ' ஒஸ்லோ ஒப்பந்தம் ' ஏற்பட்டது. மேற்குலக நாடுகள் அவரது வீரத்தை மதிப்பது போல் நடித்து தம் வலையில் சிக்க வைத்தார்கள். அந்தச் சமாதானத்தில் நடந்துவிட்ட இரு தவறுகள் தான் அவரது இடர்பாடுகளுக்குக் காரணமாயிற்று. ஒன்று தனது இராணுவச் சமநிலையைத் தக்கவைக்காதது. மற்றையது எல்லைகளற்ற ஒரு பாலஸ்தீன இராச்சியத்தை – அதுவும் தான் முன்பு கேட்டதை விடக் குறைந்த பரப்பளவு நிலத்தை ஒப்புக் கொண்டது. நேர்மையுள்ளம் கொண்ட அராபத் புதிதாகப் பிறக்கும் தன் மக்களுக்கான பாலஸ்தீனத்தில் நிம்மதியாக வாழ நினைத்தார். ஆண்டாண்டாக அலைந்து திரியும் மக்களுக்கு அமைதி தரலாமென எண்ணினார். ஆனால் அவரைச் சூழ்ந்து நின்ற வஞ்சகக் கூட்டமோ மாற்றுக் கோட்பாடுகளுடன் இருந்தது. அதன் பின் தான் அராபத் என்ற சிங்கம் அதன் குகைக்குள்ளேயே முடக்கப்பட்டது. மூன்றாண்டுகள் அவரால் தன் மக்கள் முன் தோன்ற முடியவில்லை. இது தான் சமாதானத்தின் பெறுபேறாகி விட்ட நிலை. சமாதானம் பேச வந்தவர்கள் எவரும் அவரது அப்போதைய நிலையைக் கண்டு கொள்ளவேயில்லை. அவரது வீரம் மிக்க வாழ்வு வீணாகிப் போனது. நோபல் பரிசும், உலகத் தலைவர்களின் நகாசுத் தனங்களான பாராட்டுகளும் அவரைக் குளிர வைக்கவில்லை. புறமுதுகில் குத்தப்பட்ட கொடுமையை எண்ணிக் கொதித்துப்போனார் அராபத். தன் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவன் தனது சுதந்திரத்தையே இழந்து போனமையை மக்கள் கண்டார்கள். அதன் பிரதிபலிப்பு தான் இந்தச் சடுதியான மறைவு. பாலஸ்தீனத்தின் விடிவெள்ளியை வீழ்த்திவிட்ட காதகர்கள் வரலாற்றில் தொடர்ந்தும் வாழத்தான் போகிறார்களா? அவரது மக்கள் தான் இனித் தீர்மானிக்க வேண்டும்.

எனினும் இந்த வரலாற்றிலிருந்து தமிழீழம் மிகப் பெரிய பாடத்தைப் படிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளது. கனவுகளில் நீந்துகிறவர்கள் இனியாவது கண்களைத் திறந்து கொள்ள வேண்டும் செத்தும் கொடை கொடுத்தும் சீதக்காதியாக அராபத் எதிர்காலத்தின் நமது சுதந்திர உணர்வுகளுக்குத் துணை நிற்பாரென நம்புகிறோம்.

– ஆசிரியர்

## குறுக்கெழுத்துப் போட்டி விடை

| | | | | |
|---|---|---|---|---|
| தி | லீ | ப | ன் | க |
| ர | சி | க | ன் | னி |
| வி | ய | த் | நா | ம் |
| ய | ப | சி | ட் | க் |
| ம் | டை | ங் | டி | தா |

2-வது குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெற்றவர்

Ms. S. MAYOORAN
52 Abbotts Drive
North Wembley
Middlesex
HAO 3SD

இவருக்கு £ 25 காண பணம்
லண்டன் லட்சுமி ஜுவலர்ஸ்
நிறுவனத்தாரால் அனுப்பி வைக்கப்படும்


வாடிக்கையாளர்கள்
ஒவ்வொருவருக்கும்
புத்தாண்டு தினத்தன்று
லட்சுமி ஜுவல்லர்ஸ்
நாட்காட்சி பரிசாக
வழங்கப்படுகிறது




நத்தார் மற்றும்
புதுவருட
நல்வாழ்த்துக்கள்

LAKSHMI JEWELLERS
276 High Street North
EASTHAM E12 6SA
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448


## குறுக்கெழுத்துப் போட்டி (4)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ணி | | 2 | |
| 3 | 4 | 5 | ட | |
| 6 | | து | | |
| 7 | | | 8 | ள் |
| ம் | | | | 9 |

**இடமிருந்து வலம்**

1. தமிழின் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று (5)
3. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மாநிலங்களைக் குறிக்கும் பொதுச் சொல் (5)
5. நஞ்சு (3)
6. அன்றையப் பாண்டி நாடு இதற்குப் பெயர் பெற்றது (3)
7. பக்தர்கள் இறைவனே...........என்றிருப்பர் (2)
8. பறவையின் மறுபெயர் (2)

**மேலிருந்து கீழ்**

1. நிலவு போன்ற பெண்ணின் தோற்றம் (5)
2. நீர்ப்பரப்பைக் காக்கும் தமிழ் வீரன் (5)
4. இரவு (4)
5. மகாபாரதத்தில் வரும் ஒரு பாத்திரம் (4)

**கீழிருந்து மேல்**

4. அரசி (2)
9. தண்ணீர் அளவை மிஞ்சினால் (4)

முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு £ 25 பவுண் பரிசாக அனுப்பி வைக்கப்படும்
உங்கள் விடைகளைத் தமிழர் தகவல்
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## புதுவை இரத்தினதுரையின் திருநெல்வேலி பத்திரகாளி அம்மனைப் பாடும் துயர் வெல்லும் துணை எனும் சீடீ இறுவெட்டின் வெளியீட்டின்போது பேராசிரியர் கோபன் மகாதேவாவின் நான்கு நிமிடச் சிற்றுரை :

விம்பிள்டன் சிவன்கோவில், மாலை 6.00 மணி, சனிக்கிழமை, ஒக்டோபர் 23,2004

தமிழன்பர்களே, சைவப்பெருமக்களே, தமிழறிஞர்களே, இளைஞர்களே, பிள்ளைகளே :

புதுயின் கவிதைகள் புதுமையானவை, புனிதமானவை. போரைப்பற்றிய அவரின் பிரபல்யமான கவிதைகளை நான் எரிமலை, களத்தில் போன்ற பத்திரிகைகளிலும் அவரின் சில கவிதைத் தொகுதிகளிலும் வாசித்து, திரும்பவும் வாசித்து, மறுபடி தனிமையில் உரக்கப் படித்து அளவற்ற ஆனந்தத்தைப் பெற்றிருக்கிறேன். அவற்றின் உணர்ச்சியூட்டும் தன்மையை மெச்சியிருக்கிறேன். அதேபோல் இன்று அவரின் பக்திப் பாடல்களைப் பிரபல பாடகர்கள் எஸ்பீ பாலசுப்பிரமணியம், நித்தியஸ்ரீ அவர்களுடைய குழுவினர் பாடிய இறுவெட்டைக்கேட்டு மகிழ்ந்தேன். அவரின் குரலைத் தாளிலேயே கேட்டு இரசித்திருந்த நான், இன்று சில நிமிடங்கள் முன் தொலைபேசி, ஒலிபரப்பி முதலிய நவீன சாதனங்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் இருக்கும் அவரின் திடமான, தெளிவான இயற் குரலில் பேச்சையும் கேட்டேன்.

தம்பி புதுவையின் கவிதைகளில் மண்வாசனை வழிநெடுக மிதந்து அளவளாவும். பொதுமக்களின் பேச்சு மொழி, கிராமீய உருவகங்கள், உதாரணங்கள், துள்ளிக் குதித்துத் தாண்டவமாடும்.

புதுவையின் கவிதைகள் பண்டிதர்மாருக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஆக்கப்பட்டவை அல்ல. புத்தகங்களில் பிரசுரித்துப் பொத்திவைத்துப் பரண்களில் தூசிப் பிடிப்பதற்கல்ல, புதுவை தனது கவிதைகளை எழுதினார். கற்றோர்கள் மத்தியில் தான் ஒரு பெயரும் புகழும் பெறவேண்டும் என்பதல்ல அவரின் முக்கிய நோக்கம். அவர், உரிமைக்குப் போரிடும் தமிழரின் தன்மான உணர்ச்சியைத் தட்டி எழுப்பி தமிழீழத்தின் விடிவினைச் சீக்கிரம் அமைப்பதற்கு வேண்டிய சரீரபெலன், ஆத்மசக்தி இவற்றை பெருக்குவதற்கும் இழப்புகளால் சோர்வு ஏற்படும் காலங்களில் போராளிகளின் உற்சாகத்தைக் கூட்டுவதற்குமே, பல்சுவைகளுடன், மக்களின் நாளாந்தப் பேச்சுமொழியில் கவிதைகளை வடித்தார்.

சமகாலப் பிரச்சனைகள், நடவடிக்கைகளைப் பற்றி உடனுக்குடன் எழுதிக் கவிதைகளைச் சுடச்சுட எமக்கு அளித்துதவினார் புதுவை. இன்று அம்மனைப் பாடித் தமிழரின் துயர்போக்க உதவியிருக்கிறார்.

புதுவையின் கவிதைகள் பஞ்சாமிர்தம். பனம் வெல்லமும், வறுத்துக் கோது எடுத்த பயறும் சேர்த்த குறுணி ஊர் அரிசிப் பொங்கலுடன், இளநீரும் கருப்பணியும் கலந்த நீரில் ஆக்கிய பாவக்காய்க் கறியும், கத்தரிக்காய்ப் பொரியலும், பப்பாசிப் பழமும் படைத்த பல்வேறு சுவையுள்ள பஞ்சாமிர்தம். இனிப்புடன், உறைப்பும் உவர்ப்பும் சேர்த்து ஆக்கப்பட்ட பஞ்சாமிர்தப் படைப்புகள் தான் புதுவையின் கவிதைகள். இவற்றுடன், தனது பொருந்தத் தக்க தலையங்கங்களால் எமக்குப் புளுக்கொடியல், தேங்காய்ச் சொட்டு, பச்சடி முதலிய பதார்த்தங்களை அருந்திய இன்பத்தையும் தந்துள்ளார், புதுவை.

இன்றைய இறுவெட்டில் வரும், உச்சியைப் பிச்சு மலர் வைத்தாள், இருளின் அழகிய முகமுடையாள் என்பவை போன்ற பச்சைமொழித் தமிழ்த் தொடர்கள் எங்களுக்கு அசல் புதுவையைக் காட்டுகின்றன.

ஈழத்தமிழர் உரிமைப் போருக்குப் போராளிகள் அளித்த பெரும் பங்களிப்புக்குச் சளைக்காத பங்களிப்பு, தன் உணர்ச்சியூட்டும் கவிதைகளினால் அவர்களுக்குத் தென்பு ஊட்டிய புதுவையின் பங்களிப்பு, இதை அவர்களே, புதுவை அண்ணா, புதுவை அண்ணா என அவரைப் போற்றிப் பேணி, அவரின் கவிதைகளைத் தேடியெடுத்து நூல் உருவில் வெளிக் கொணர்ந்த அன்புப் பணியினால் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். அத்துடன், புதுவையின் தனித்துவம் மிக்க பங்களிப்பை, தனிசிறந்த தொண்டினை, அவரின் தலைவரே, தமிழர் தலைவர், எங்கள் தலைவர், நான் மதிக்கும் தலைவரே ஏற்றுக்கொண்டு புகழ்ந்திருக்கிறார்.

அப்படியான தொண்டுகளை ஆற்றிய பழகுதமிழ்க் கவிஞர் திரு. புதுவை இரத்தினதுரையின் புதிய, பல மெட்டுகளில் கிராமீயப் பாணியில் அமைந்த பக்திப்பாடல்கள் மூலம் திருநெல்வேலி பத்திரகாளி அம்மனின் புகழ்பாடும் சீடீ இறுவெட்டின், ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழாவில் பங்கு கொண்டு, இங்கு வருகை தந்திருக்கும் பெரியோர்களுடன் ஒருவனாக ஊக்குவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அவரின், சீடீத் தட்டுகள், இறுவெட்டுகள், நாடாக்கள், இலட்சக்கணக்கில் விற்பனையாகி, பத்திரகாளி அம்மனுக்கும் அவருக்கும், அவரின் குடும்பத்துக்கும் உதவ வேண்டுமென்று பிரார்த்தித்து முடிக்கிறேன்.


Merry Christmas
& Happy New Year
JK GOLD HOUSE

314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

# Fashion House Ltd



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

## West Croydon-ல்



## BEST FOOD SUPER MARKET

அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய்,
அவல், ஊறுகாய், வடகம்,
மரக்கறி வகைகள்,
பழவகைகள், கடல் உணவு வகைகள்,
இன்னும் பல உடனுக்குடன்
இறக்குமதி செய்கிறோம்



259-261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel: 020 8684 6269
Fax: 020 8686 4577

## Harrow-வில்



## BEST FOOD SUPER MARKET

அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய்,
அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள்,
பழவகைகள், கடல் உணவு வகைகள்,
இன்னும் பல உடனுக்குடன்
இறக்குமதி செய்கிறோம்

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel: 020 8423 9933

சுகி சிவம் அவர்களின் அனைத்துப் புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ரமணி சந்திரனின் புத்தகங்கள் யாவும் 2 பவுண் மட்டுமே




## A1 PARTTY SERVICES



திருமணமா
பூப்புனித நீராட்டுவிழாவா
பிறந்த தினமா
நீங்கள்
அழைக்க வேண்டியவர்கள்

## A1 PARTY SERVICES

**லிங்கம் பலூன்ஸ்**

மணவறை – பலூன் அலங்காரம்
ஒடியோ, வீடியோ உடன் அழையுங்கள்
தொடர்பு : 07958652647
020 8710 9648

## Hounslow-வில்

## BEST FOOD SUPER MARKET

அரிசிமா, மிளகாய்த் தூள்,
நல்லெண்ணெய், அவல், ஊறுகாய்,
வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள்,
கடல் உணவு வகைகள், இன்னும் பல உடனுக்குடன்
இறக்குமதி செய்கிறோம்

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel: 020 8577 6002
Fax: 020 8570 2323



# இந்து மதமும் வழிமுறைகளும்

நிஷானி ஜெயபாலன்

இந்து மதம் தொன்மையானது. இந்து மதம் ஒரு மகாசமுத்திரம். இம் மதம் ஒருவராலும் உருவாக்கப்படவில்லை. இந்து மதம் பிறமதங்களை விட முதன்மையானதும் பழமையானதும் கூட. இந்து மதத்துக்கு ஒரு பெருமை உண்டு. அது என்ன என்றால் பிற மதங்களின் கொள்கை யாவும் நமது மதத்தில் அடங்கியுள்ளன. அஹிம்சை, அன்பு, அருவவழிபாடு, உருவவழிபாடு எல்லாவற்றையும் விளக்கிக் கூறுகிறது. இந்து மதம் வேதாந்தம், சைவம், சாக்தம், வைணவம் முதிலிய பல வேறு சமயக் கோட்பாடுகளையும் அடக்கி உள்ளது. இந்து மதக்கலாச்சாரமும் சம்பிரதாயமும், சித்தாந்தங்களும் மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாகத் திகழ்கின்றன. இந்து மதம் மற்றைய மதங்களைக் குறை கூறுவதில்லை. இந்து மதமே தான் எல்லா மதங்களையும் விட உயர்ந்ததே. மற்ற எல்லா மதமும் சம மதங்களே என்கிறது.

ஈஸ்வர அல்லா தேரே நாம்

ஸப்போ சன்மதிதே பகவான் என்கிறது

இந்து மதத்தையும், தத்துவத்தையும் சான்றோர்கள் விளக்கங்களைக் கூறி வந்துள்ளார்கள். சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்னர், பரமஹம்சர், காந்தியடிகள், அரவிந்தர், ரமணர் போன்றவர்கள் இந்து சமயத்தை உலகளாவும் பரப்பினார்கள். இந்து சமயச் சவால்களை பல பெரியோர்கள் பாதுகாத்து வந்துள்ளார்கள். திருமுருக கிருபானந்த வாரியார், கவியரசர் கண்ணதாசன் பகவான் சத்திய சாய்பாபா போன்றவர்களும் இந்து சமயத்தைப் போதித்தும் நல்ல புஸ்தகங்களை எழுதியும் வெளியிட்டுள்ளார்கள்.

இந்து மதத்தின் தனி அழகே கோயில்கள். திருவிழாக்களின் சிறப்பு, கடவுளின் உருவவழிபாட்டின் சிறப்புகளையும் மக்கள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். இந்து மதம் மனிதர்களுக்குப் பூர்ண சுதந்திரம் அளிக்கிறது. இறைநிலை, படைப்பின் விசேஷம், வழிபாட்டு முறை ஆகியவற்றை கடைப்பிடிக்கச் சுதந்திரம் அளிக்கிறது. இந்து மதத்தைப்போல் சகிப்புத் தன்மை மிகுந்த ஒரு மதம் உலகில் எங்குமே இல்லை. வேதசாஸ்திரகள், நாம் அனுசரிக்கும் சின்னங்கள், ஆலயங்கள், சடங்குகள் எல்லாம் வெளிப்படையாக இந்துக்களின் நடைமுறையில் அமைந்து இருப்பதால் இந்து மதம் வளர்ந்துள்ளது.

இந்து மதத்தின் கோயில்களில் பலபெயர்களோடு, பல உருவங்கள் உள்ளதைப் பார்க்கலாம். ஆனால் தெய்வம் ஒன்றுதான். அதேபோல் ஒரே பரம் பொருளை முருகா என்றாலும் சிவனே என்று துதித்தாலும், திருமாலே என்று துதித்தாலும், கணபதியே என்று துதித்தாலும் இறைவன் ஒருவன்தான். பலப்பல பேதங்களைத் தாங்கி நிற்கிறார்கள், ஆதலால் கடவுள் ஒன்று, அவரை அடையப் பல வழிகள் உள்ளன. திருவருள் தாகத்துடன் ஒரு மூர்த்தியை எண்ணி ஒருமைப்பட்டுத் தியானித்து உய்யவேண்டுமென்று இந்து மதம் கூறுகிறது.

இந்து மதம் புலால் (மாமிசம்) உணவைத் தடுத்துள்ளது. அதனால் புலாலைத் தரும் கோடிக்கணக்கான இறைவன் படைத்த உயிர்களைக்காக்க முடியும் என்பதை நிரூபித்துள்ளது. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும். புலால் தின்பதையும், உயிர்க் கொலை செய்து ஊன் தின்று கடைப்பிடிக்கும் மற்ற மதங்களை விடச் சிறந்தது இந்து மதம் எனலாம்.


ALL UNDER ONE ROOF

SKC

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

SOLICITORS & ESTATE AGENTS

Sales, Letting & Management


- வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல்.
- அனுபவம் மிக்க சட்டத்தரணிகளின் ஆலோசனைகள், சேவைகள் எல்லாமே ஒரே கூரையின் கீழ் செய்து கொடுக்கப்படும்.
- வீடுகளுக்கும் வியாபார நிலையங்களுக்குமான சகல விதமான வங்கி கடன் உதவிகளும், காப்புறுதி திட்டங்களும் சுயாதீனமான தரகர்களின் மூலம் பொறுப்புடன் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- வடமேற்கு லண்டனில் உள்ள பல்வேறு எஸ்டேற் ஏஜென்டுகளை நாமே ஏஜென்டுகளாக நியமித்து விரைவிலே வீடுகளை விற்பனை செய்கின்றோம்.
- சட்டத்தரணிகளின் தொழில் தர்மம் எல்லா வகையிலும் பேணப்படும் ஏனென்றால் நாம் Law Societyயினால் நெறிப்படுத்தப்படுபவர்கள்




557 High Road
Wembley, Middlesex
HA0 2DW

Opening Hours
Mon-Fri: 9am - 6pm
Sat: 9.30am-5pm

Tel: 020-8795 0648
Mobile: 07831 195 979
Fax: 020 8795 0649



# பத்து மலை

டாக்டர். க. கதிர்காமநாதன்

குன்றின் மீது குமரன் வீற்றிருப்பதையும், குகையினுள் குகன் குடியிருப்பதையும் அறிந்திருப்பீர்கள். ஆனால் குன்றின் மீதிருக்கும் குகையில் முருகனைக் கண்டதுண்டா? இதற்குப் பதில்தான் பத்துமலை. இது மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இருக்கிறது.

மலேசியாவில்தான், அந்தக்காலத்திலே எம்மவர்புலம் பெயர்ந்தது. மலேயா எனறு முன்பு கூறப்பட்டு, 1963லிருந்து மலேசியாவாகிவிட்டது. எமக்கு உறவுப்பாலமாகிவிட்ட நாடு இதுவேதான். என்னைத் தம்பி, தம்பி எனக் கூறி, தூக்கி மோந்து, வாழ்ந்து, தெய்வமாகிய அக்கா பிறந்ததே மலேசியாவில்தான்..

சினிமாப்படத்தில் பத்துமலைக் கோவிலை சிலர் பார்த்திருக்கக் கூடும். நமக்கு 2004ஆம் வருடம், ஆனிமாதம், ஆறாம் திகதி அகம் குளிரத் தரிசிக்கும்பேறு கிடைத்தது. கோலாலம்பூரிலிருந்து வடக்குப் பக்கமாக 6 மைல் தொலைவில் இக்கோவில் இருக்கிறது. அன்றையத் தமிழரின் நாட்டுப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக சுமார் 115 வருட ஆயுள் கொண்ட ஆலயம் இதுவாகும். கோவிலின் அடியை அடைந்தவுடன், மலையைத் தவிர விசாலமான சமதரையாக 16 ஏக்கர் நிலத்தைக் காணலாம். இங்கு பல கடைகள், பேருந்து, கார் நிறுத்த இடவசதிகள் யாவும் மிக ஒழுங்காக அமைத்திருக்கிறார்கள். முதலில் எம்மைக் கவர்ந்தது 50 அடி உயரத்தில் கம்பீரமாக நிற்கும் ஆஞ்சநேயரே: இவர் வெண்நிறத்தில் தன் மார்பைப் பிளப்பதுபோல் தோன்றுகிறார். சிறிது கோவிலை நோக்கிச் சென்றபின் தமிழில் கொட்டை எழுத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் என்கிற பெயர்ப்பலகையைக் காணலாம். அடேயப்பா இங்கும் தமிழ் செழித்திருக்கிறதென மனம் மகிழும்! இதன் கீழ் ஆலய அலுவலகம் உளது. அவர்கள் மிக ஆதரவாக நமது கேள்விகளுக்குப் பதிலளிப்பர். பற்றுச்சீட்டும் இங்குதான் பெறல் வேண்டும்.



சரஸ்வதி - எமது கலைவாணியைத்தான் இதன் பின்னர் காண்கிறோம். குளக்கரையில் வெண்கலையுடுத்தி, வெண்தாமரையில் வீணையோடு வீற்றிருக்கும் அழகே அழகு. அருகினில் மயில் இருக்க, கீழே மான்கள் நிற்க, பார்க்கும்போது எம்மவர்களுக்கு கல்விக்கு முதலிடம் கொடுக்கும் ஏற்பை வியந்தேன். ஆழமில்லா இக்குளத்தில் மீன்களைக் காணலாம். வெயிற்காலத்தில், குளிர்மைக்கும் காரணம் இக்குளமேயாகும்.

மலையடிவாரத்தில் இருக்கும், பிள்ளையார் கோவிலுக்குச் சென்றோம். பூசகர் யாவரையும் ஒருமுகமாகப் பாவித்து, அர்ச்சனைசெய்து, தீபம் காட்டி, பிரசாதம் வழங்கினார். அருகினிலிருக்கும் மீனாட்சி அம்மனையும் வணங்கிய பின்னர் மலையடிவாரத்திற்குச் சென்றோம்.

மலையடிவாரத்தில் ஒரு சிறு கோபுரத்தைக் கண்டோம். இதில் முருகன், ஆறுமுகமாக மயிலின் மீதமர்ந்து, இரு துணைவிகள் பக்கத்தில் நிற்க காட்சியளிக்கிறார். மலை, கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரமுள்ளது. அடைய 272 படிகள் ஏற வேண்டும். படிகள் மிக விசாலமாகும், பிடித்துக்கொண்டு ஏற சாதனைகளைக் கொண்டுள்ளன. இது மாத்திரமின்றி ஒவ்வொரு 17 படிகள் ஏறியபின்னர் நின்று இளைப்பாறி, இனிமையான

சுற்றாடலை ரசிக்க, மிக அகலமான படி அமைத்துளர். இங்குதான் மக்கள் சிறுகுரங்குகளோடு விளையாடுவதைக் காணலாம். கடலை கொடுப்பதும், அவை கையை நீட்டுவதும், ஓடுவதும் பார்க்கப் பரவசமாக இருக்கும். நாம் ஒரு குரங்கு, புட்டியில் பால் குடிப்பதைப் பார்த்தோம். அது மனிதன் குடிப்பதுபோல் குடித்தது! குரங்குக் கூட்டத்தை தவிர, புறாக்கூட்டத்தையும் காணலாம்! மலை ஏறுவது அவ்வளவு சிரமமல்ல – சுலபமாகவே ஏறலாம். படிகள் முடிந்தவுடன் இன்னுமொரு கோபுரத்தைக் காணலாம்.

குகையினுள் செல்லும்போது, தமிழர் கடவுளாகிய முருகனைக் காணலாம். ஒரு குடையின் கீழ் நின்று, திருக்கையில் வேலோடும், பக்கத்தில் மயிலோடும் எமை அபய கரத்தோடு வரவேற்கிறார்.

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை

குகையினுள்ளே சென்றதும், குளிர்ச்சியான காற்று எமை வரவேற்கிறது. வெயிலில் வாடிச் சென்ற எமக்கு இது மனத்தைக் குளிரவைத்தது மாத்திரமின்றி, அருகினில் நின்று அருள்பாலிக்கும் முருகன் மீது பற்றை ஏற்படுத்தியது. இருட்டோ, வெளவால் கூட்டங்கள் பறந்து ஒளிவதையோ நாம் காணவில்லை. சுத்தமான பராமரிப்பையும், சூரிய ஒளியையும்கூட குகையினுள் காணக்கூடியதாகவிருந்தது. முருகன் போன்று, நடராசன், பழனி ஆண்டவர், பாம்பின் மீது நர்த்தனமாடும் கிருஷ்ணன் போன்ற உருவங்களைக் கோவிலை அடையுமுன் காணலாம். ஒரு இடத்தில் மாம்பழக் கதையை அழகாக உருவ அமைப்பில் கண்டோம். சிறு கடைகளும் குகையினுள் இருக்கின்றன.

சிவகுருநாதனாகிய முருகனின் கோவிலைக் கடைசியில் அடைந்தோம். சிறுகோவில்தான், ஆனால் கீர்த்தி பெரியது. கோவிலைச் சுற்றி வலம் வரலாம். பிரார்த்தனை செய்யலாம். மலைகள் சுண்ணாம்புக் கற்களை கொண்டதாகும். இக்குகையை இயற்கையை வளர்ப்போரும், ஆராய்ச்சியாளரும்கூட பராமரிக்கின்றனர். முருகன் சந்நிதானத்தைப் பார்த்தால், இளமையோடு, கருணை பொழியும் கண்களோடு, மலர்ந்த முகத்தோடு அருள் பாலிப்பதைக் காணலாம். நின்ற கோலத்திலிருக்கும் முருகன் வள்ளி, தெய்வானை சமேதரராகக் காட்சி கொடுக்கலாம். எவ்வளவு நேரமும் பார்க்கலாம். தரிசிக்கலாம், சலிப்பேற்படாது. நாங்கள் சென்ற சமயம் பூசை நடந்து கொண்டிருந்தது. ஒலிநாடாவில் முருகன் பக்திப்பாடல்கள் பாட தீப தூபம் காட்டப்பட்டது. இக்காட்சியை வீடியோ காமரா மூலம் எடுக்கவும் அனுமதித்தனர். இதை வீட்டில் மீண்டும், மீண்டும் பார்த்து அனுபவிக்கலாம்! பூமாலைகள் அணிந்து புன்முறுவலுடன் கோரிக்கையை நிறைவேற்றும் சுப்பனை கண்டால் உடன்,

சுப்பிரமணியம், சுப்பிரமணியம் சண்முகநாதன், சண்முகநாதன் என்று பாடத்தான் தோன்றும்.

முருகன் கோவிலுக்குச் சிறிது கீழே வந்தால் வேல் முருகன் கோவிலை அடையலாம். இங்கு ஓம் சரவணபவ, ஓம் சரவணபவ என ஒலிகேட்க பூசை நடைபெற்றது. குமரன் வேலோடு தனியாக நின்று காட்சியளிக்கிறார்.

கோவில் தரிசனத்தை முடித்துக்கொண்டு கீழே வந்தால் சூரியனார் கோவிலுக்குச் செல்லலாம். இவற்றைவிட கலைக்கூடம் , வள்ளுவர்கோட்டம், இராமாயணக்குகை போன்ற குகைகளையும் பார்க்கலாம்.

சனப்படையை ஈர்க்கும் கோவிலாகவே இது இருக்கிறது. தைப்பூச நன்னாளில் பிறநாட்டிலிருந்தும், இந்நாட்டிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் பங்குபெறுவர். இந்நாளில்தான் முருகன் அன்னை பார்வதியிடமிருந்து வேல் பெற்றது. பக்தர்கள் பால்காவடி, ஆட்டக்காவடி யாவும் கூட்டம் கூட்டமாக எடுப்பர். இதனால் இடதுபக்கம் மலையேறுவோரும், வலதுபக்கம் இறங்குபவரும், நடுவில் காவடி மட்டும் செல்ல அனுமதிப்பர்.

முருகன் 21 அடி உயரமுள்ள தேரிலேறி வீதி வலம் செய்து அருள்பாலிப்பார். இக்காட்சியைக் காண மக்கள் காலையிலிருந்தே கூடுவராம்.



பது என்ற பெயர், அருகில் ஓடும் சுங்காய் பது என்னும் ஆற்றின் பெயரிலிருந்து வந்தது. மலேசியாவின் கடல் வளம், நில வளம் யாவும் பிரசித்தியுடையது. உணவைச் சுவைப்பதற்காகவே ஏராளமான பிறநாட்டவர்கள் படையெடுப்பர். எம்மைப் பொறுத்தவரையில் இம் முருகனின் அருள் இன்றியமையாதது. முதல்நாள் சென்றோம். அன்று கோவில் பூட்டியிருந்தது. மறுநாள்தான் தரிசிக்க முடிந்தது. இதை விட இங்குள்ளோர் எமை ஆதரிக்கும் விதத்தைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும். யார் சென்றாலும் தமது உறவினர் போன்று உணரப்பண்ணி உரிமையுடன் உபசரிப்பர். அவர்களின் குடும்ப ஒற்றுமையும், ஒருமுகமாக முரணடையாமல், கதைத்து, எமை எமது வீடுபோல வீட்டிலிருப்பதுபோல் வைத்து விருந்தோம்பல் செய்வதே அலாதி. இதை விடக் கடைகளிலும் அருமையான உணவு. கொடுக்கும் பணத்திற்கு மேலான பெருமதியுடையவையை உண்ணலாம். வேறென்ன வேண்டும்?

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே



# தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையிலிருந்து சில முக்கிய குறிப்புகள்

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத் திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படை வலுச் சமநிலையை நிலை நாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப் படுத்தி, உலகத்தின் கவனத்தை எம்மீது திருப்பினோம். எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவு பெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலைபெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபட வில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

எனது அன்பான மக்களே,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வுகொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக் கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்றடவையாக விடுதலைப் புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந் நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதே சமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக் கண்டித்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

போர்நிறுத்தம்செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப்

பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கிவருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்ட வேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமையவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம்வகிக்கும் தீவிரவாத இனத் துவேசச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம். இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர் போன்று சர்வதேசச் சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப் பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப் போவதில்லை என்பது புலனாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கந் தயாராக இல்லை.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத் திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையுந் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடிமறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக்கனவை, எத்தகைய இடர்கள், சாவல்களை எதிர்கொண்டபோதும் நிறைவுசெய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்

# உறவுகள்



( எழுத்தாளரான ' மௌனி ' சிறுகதைகளின் ' திருமூலர் ' என்று புதுமைப்பித்தனால் குறிப்பிடப்பட்டதுண்டு. ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை ஆக்கத்தில் இன்னொரு ' மௌனி ' தான் சட்டநாதன் மாஸ்டர். யாழ்ப்பாணச் சாதியத்தை மிகைப்படுத்தப்படாத யதார்த்தச் சிந்தனைகளூடே சிறுகதைகளாக வார்த்த பெருமை சட்டநாதன் மாஸ்டருக்குண்டு. எவரையும் இடர்ப்படுத்தாது தான் எடுத்த கருவை எல்லோர் மனதிலும் பதிய வைக்கும் பக்குவம் மாஸ்டரின் தனித்துவம். ' தமிழ்க் கதைஞர் வட்டம் ' என்ற ' தகவம் ' சிறுகதைகட்கான மதிப்பீட்டில் மாஸ்டரின் கதைகள் பலமுறை பரிசு பெற்றமையை இங்கு குறிப்பிடலாம். எளிமையான வாழ்வும் எவரிடமும் எதிர்பாராத தன்மையும் கொண்ட சட்டநாதன் மாஸ்டர் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார். இச்சிறுகதை 1976இல் வெளிவந்தது. இதை மறுபிரசுரம் செய்வதில் ' தமிழர் தகவல் ' பெருமையடைகிறது.)

–ஆசிரியர்

கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவிலை அடுத்து, வடக்கே கிளை பிரியும் சந்தில் – பள்ளத்தில், ஒரு மாடி வீட்டின் கீழ்ப் பகுதியில் ஒதுக்குப்புறமாக உள்ள ஒரு அறையில் அவனும் அவளும் குடியிருக்கிறார்கள். இருவருமே வேலை செய்வதால் மாலை ஐந்து மணிக்கு மேல்தான் அவர்களை அந்த அறையில் காணலாம். பகற்பொழுதெல்லாம் அந்த அறை பூட்டியே கிடக்கும். அப்பொழுது அவர்கள் எங்காவது ' அவுட்டிங் ' அல்லது நண்பர்களது வீடுகளுக்குப் போயிருப்பார்கள். சில சமயங்களில் இலக்கியக் கூட்டம் அது இதென்று அவள் போக – பிடிக்காத, பிடிபடாத விஷயமானாலும் கூட – அவனும் போவான். அந்த நடைமுறை கூட இப்பொழுது சிறுகச் சிறுகச் குறைந்து விட்டிருக்கிறது. அவள் அரசுத் துறையில் எழுதுவினைஞராகப் பணியாற்றுகிறாள். அவன் தனியார் கொம்பனியொன்றில் சொற்ப ஊதியத்தில் ஏதோ உத்தியோகம் என்று ' பேர் ' பண்ணுகிறான். இருவரது ஊதியமும் ' அப்படி இப்படித் ' தான் இருந்தும் அவளுக்குச் சம்பளம் சலுகைகள் சற்று அதிகம். பட்டதாரியான அவன் இருநூற்றுக்கு ' மட்டையடிக்க ' அவன் முந்நூற்றம்பதுவரை எடுத்தாள்.

இருவருடைய மாத வருமானமும் கழிவுகள் போக ஐந்நூறு ரூபாயைத் தாண்டாத நிலை. அதில் அவர்கள் குடியிருக்கும் அறை ' சுளையாக ' நூறை விழுங்கி விடுகிறது. மீதத்தில்தான் குடித்தனம் நடக்கிறது. இவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணம் நடந்தபின் நாலைந்து மாதங்கள் இவர்களிடையே எவ்வளவு நெருக்கமும் நெகிழ்வும். அதன்பின், அவர்களது தாம்பத்ய உறவில் விழுந்துவிட்ட சிறு விரிசல், நிரவுபடாமற் பெரிதாகி, இப்பொழுதெல்லாம் ஒரு வருஷ காலமாக இருவரும் எப்பொழுது பிரிந்துபோவது என்ற அபாயத்துடன் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் அவளைக் காரணம் சொல்ல முடியாது. அவன்தான் காரணம். பிரிந்து போவதில் கூட அவள் ஆர்வங்காட்டவில்லை. அவன்தான் திடீரென இப்பொழுது ' அது பற்றி ' மிகுந்த ஆர்வங்கொண்டவனாய்ப் பேசுகிறான். அது பேச்சளவில்தான் என்பது அவளுக்குத் தெரியும். அவளில்லாமல் அவனால் இருக்க முடியாதென்பது அவளுக்குத் தெரியும். முரட்டுத்தனங்களால் வாழ்வில் – அவனுடன் வாழ்வதில், ஒரு க்சப்பு லேசாக அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தும் அவனுடன்தான் அவள் வாழ்கின்றாள். இறுதி வரைக்கும் அவனுடன் தான் வாழ்ந்துவிடுவது என்றும் உறுதி பூண்டுள்ளாள். ஆனால் எதற்குமே அவசரப்படும் அவன் இவளுடன் இறுதிவரை வாழ்ந்து விடுவானா? லேசான ஒரு பயம் அவளை அலைக்கழிக்கவே செய்கிறது.

இந்த வாழ்க்கையிலும், அவளுக்கு ஓர் இனிமையான பகுதி உண்டென்றால் அதுதான் அவளது எழுத்தும் இலக்கியமும், அதில் தன்னை ஈடுபடுத்தியபோது – தனது வாழ்வின் அவலங்களையே மறந்து விடுகின்றாள். அவள் அதிகம் எழுதுவதில்லை. எழுதியதெல்லாம் அற்புதமாக வந்திருக்கின்றன. அவள் எழுதுவதற்கு ஒரு வகையில் தூண்டுகோலாய், துணையாயிருப்பவன் ' அருண் ' என்கிற அருணாச்சலம்தான். அந்த அற்புதமான எழுத்தாளனது தொடர்புகள் அவளது படைப்புகளில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆரம்ப காலத்தில், சதா முக்கோணக் காதல் கதைகளையே எழுதிக் குவித்துவந்த அவள், இப்பொழுதெல்லாம் மனிதன்பால் அதீத நேயம் பூண்டு வர்க்கநலம் பேணும் எழுத்தை வடிப்பதென்றால்! அந்த மாற்றம் மகத்தான ஒன்றுதான். வேலை முடிந்து, கந்தோரிலிருந்து நேராக வீட்டுக்கு வந்தவள், அறைக்கு முன்னால் பாற்காரன் வைத்து விட்டுச் சென்ற பால்போத்தல் சரிந்து உடைந்து கிடப்பதைக் கண்டு, சிறிதும் பதட்டமில்லாமல் – உடைந்த போத்தலை அகற்றிவிட்டு, அறைக்கதவைத் திறந்தாள். அறை இருட்டாகவே இருந்தது. ஜன்னலைத் திறக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. அலுப்புடன் கையில் இருந்தவற்றை அங்கு கிடந்த மேசையில் போட்டுவிட்டு, சோபாவில் சோர்வுடன் சாய்ந்துகொண்டாள். சற்று அசதியாக இருக்கவே, அயர்ந்து தூங்கி விடுகிறாள். அவள் விழித்தபோது ' லயிற் ' எரிந்து கொண்டிருந்தது. மணியைப் பார்த்தாள். ஆறுக்குப் பத்து நிமிடங்கள். யார் லயிற் போட்டது. அவன் வந்து விட்டானோ? மனம் பதைத்தவளாய் எழுந்துகொண்டாள்.

அவன் வந்ததும் அவனுக்குக் கோப்பி கொடுக்க வேண்டும். அல்லது அவன் கோபமுற்று, அதையே சாட்டாக வைத்து ஒரு பாட்டம் நாகரிகமில்லாமல் திட்டித் தீர்த்துவிடுவான். இது இப்பொழுது ஒரு சில நாட்களாய் நடைபெற்று வருகிறது. சிறு உரசலே அவனுக்குப் போதுமானதாய் விடுகிறது. அவன் நெருப்பாய் மாறி விடுகிறான். அப்படியொரு நிலை இப்போது வேண்டாமென அவள் பயந்து சுற்று முற்றும் பார்த்தாள். அவன் வந்த சலனமில்லை. அவளே ' லயிற்றை ' நித்தரைச் சோம்பலுடன் எழுந்து போட்டுவிட்டு மீண்டும் படுத்திருக்கவேண்டும். சோம்பலையும் கோழித்தூக்கத்தையும் உதறியபடி எழுந்தவள், சேலையை உருவி எறிந்து விட்டு, குளியலறைக்கு – பழைய சாக்கால் மறைப்புக் கட்டிய குழாயடிக்குச் சென்றாள். குளித்துவிட்டு வந்தவள் கவுணைப் போட்டபடி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். தலையைக் கூட வார வேண்டுமென்று அவளுக்குத் தோன்ற வில்லை. கூந்தலை ஈரம் சொட்டச் சொட்ட வாரி முடிந்தபடி நிமிர்ந்தபோது அவளது பார்வை, அவனும் அவளும் திருமணத்தின் போது எடுத்த படுத்தின் மீது தரித்தது. கசப்பான ஓர் உணர்வின் நெருடலுடன் அவள் லேசாகச் சிரித்துக் கொண்டாள்.



அவர்களது திருமணம் ஒரு அவசரத்துடன் தான் நடந்தது. அந்த அவசரத்துக்குக் காரணம் அவன்தான். அவள் எவ்வளவு நிதானமாக இருக்கிறாளோ அதற்கு எதிரிடையாக அவன் எதற்குமே அவசரப்படுவான். அவள், அவனை முதன்முதலில் கொழும்பில் சந்தித்தது, கொட்டாஞ்சேனை பஸ்ஸில்தான். வெள்ளவத்தை பஸ்தரிப்பில் ஏறியவன் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவளை, இவன் யாரோ ஒரு பெண்ணென நினைத்து, இயல்பான யாழ்ப்பாணத்துக் கூச்சத்துடன் ஒதுங்கியிருந்து கொண்டான். எதேச்சையாக இவனது பக்கம் திரும்பிய அவள் '' யாரது சந்திரனா? '' என்று புன்னகைத்தாள். அவனுக்கு அவளை உடன் யாரென அறிந்து கொள்ள முடியவில்லை. பின் ஒருவாறு அனுமானித்துக் கொண்டான். '' ஓ..... எத்தனை வருஷங்களுக்கு முந்திக் கண்டது.....? ஒல்லியாய் கறுப்பாய் உடம்பிலே சதைபிடிப்பேயில்லாம அழுக்குப் பாவாடையும் கிழிஞ்ச சட்டையுமாய்..... மூக்கில் சதா சளிவழிஞ்ச தடம் புண்ணாயிருக்கும் கோலத்துடன் திரிந்த கமலாவா இவள்.....! வினாசியின்ரை மகளுக்கு இவ்வளவு எழுப்பமே.....! '' கோவியப் பெட்டை என்ற நினைப்பு வந்ததும் இன்னும் சற்று ஒதுங்கியே உட்கார்ந்து கொண்டான். அவளை அவன் பொருட்படுத்தியதாகத் தெரிய வில்லை. அவளாகவே மீண்டும் '' மட்டுக்ககட்டேல்லைப் போல.....? '' த டி வி ன ா சி யி ன் ை ர மகள்தானே.....தெரியுது..... நல்லாத் தெரியிது.

....... ....... ....... ....... .......

'' எங்கை இந்தப் பக்கம் '' நானே நான் கிளரிக்கல் சேர்விஸிலே எடுபட்டு இன்கம்ராக்ஸிலே வேலை செய்யிறன்.

'' இன்கம்ராக்ஸோ.....? '' அவன் பொறாமையால் வெந்து போகிறானென்பது அவளுக்குத் தெரிகிறது. ஏதோ தனியார் கொம்பனியொன்றில் அரைகுறை ஊதியம் பெறுபவனுக்கு, அவள் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பது பொறாமையை ஊட்டியதில் வியப்பில்லைதானே.

'' சேர்விசிலே சேர்ந்தது பென்சன் ஸ்கீம் இருக்கேக்கையோ இல்லைப் பிந்தியோ? ''

'' இருக்கேக்கைதான். அதுசரி இந்த வரவு செலவோடை எல்லாருக்கும் பென்சன் எண்டுதான் நிதிமந்திரி அறிவிச்சிருக்கிறார்''. '' ஓ, நான் அதை மறந்துட்டன். அதுசரி நீ சிவானந்த வீதியிலேயே இருக்கிறது? '' ஓம்.....ஓம்....... உங்களுக்கு எப்படித் தெரியும்......! '' '' அங்கே ஒரு கேள்ஸ் ஹொஸ்டல் இருக்கு அதுதான் கேட்டனன் ''

'' நீங்களும் கொட்டாஞ்சேனையில் தானே இருக்கிறது? ''

'' ஓம், மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலே.'' அவர்கள் இருவரும் அதன் பின் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் அவன் அடிக்கடி அவளை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டான். ' இவள்..... இவள் கமலா..... இவ்வளவு அழகாக எப்படி இருக்க முடியும்.! கறுப்பி - இளஞ் சிவப்பாய் இருக்கிறாள்..... எலும்பாய்க் கிடந்தவள்...... என்னமாதிரி.....ஓ..... எல்லாமே பூரிச்சுக் கிடக்கு ''

'' அவள் பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தாள். இவனும் தன் உணர்வு இழந்தவனாய் அவளுடன் அவளது விடுதிவரைக்கும் வந்து விடுகிறான். பின் ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளிடம் விடை பெற்றுக் கொண்டான். அன்றிலிருந்து அவன் அவளை அடிக்கடி சந்தித்தான். சந்திக்காவிடில் அவனுக்கு எதுவுமே ஓடாது, தலை வெடித்துவிடும் போலிருக்கும். கோவியப்பெட்டைதானே தட்டிப்பார்த்தால் எடுபட்டிடுவாள் '' என்ற கெட்ட எண்ணம் தான் அவனுக்கு முதலில் இருந்தது. ஆனால், அவளது அறிவு, அவள் நடந்துகொள்ளும் விதம், அவள் கைநிறையச் சம்பாதிக்கும் பணம், அவள் எடுக்க இருக்கும் பென்சன் என்ற எதிர்காலப் பாதுகாப்பு என்று, எல்லாம்சேர்ந்து அவளை மணந்து கொண்டால் தானென்ன என்ற உணர்வை அவனுக்கு ஏற்படுத்தும். திடீரெனத் தனது குடும்பத்திற்குப் பரம்பரை பரம்பரையாக, குடிமையாக இருந்த வம்சத்தின் வித்து அவள் என்பது நினைவு வந்தது. அருவருப்புடன் உடம்பு கூசி 'தூ.....' என்று காறித்துப்புவான். என்ன இருந்தென்ன, அவளது இளமையிலும், இனிமையான வசீகரத்திலும் இவனது ஆண்மை கரையவே, அவன் அவளைத் தீவிரமாகக் காதலிக்கத் தலைப்பட்டான். தனது எண்ணத்தை, காதலை இவன் ஒரு சமயம் அவளுடன் விகாரமஹாதேவி பூங்காவில் இருந்தபோது வெளியிட்டான். அப்போது அவள் எதுவித உணர்ச்சிப்பாதிப்புக்கும் உட்படாதவளாய் விழுந்து விழுந்து சிரித்த சிரிப்பு இவனது உடலையே குறுக வைத்துவிட்டது.

' இவள் என்னை....... எனது காதலை ஏற்க மறுத்துவிடுவாளோ ' என்று உணர்ச்சி வேகத்துடன் திடுக்குற்று அவளை - அவளது காதலை யாசிப்பது போல் அவளையே பார்த்தான். '' சாதியிலே குறைஞ்ச பெட்டை, அதுவும் தாவடிக்காரருக்கு குடிமை வேலைசெய்த சின்னன்ரை பூட்டி, முத்தன்ரை பேத்தி, தடிவினாசின்ரை மகள் - இந்த பெட்டையை முடிச்சிட்டு உங்களாலை ஊர்ப்பக்கம் தலைகாட்ட ஏலுமே '' அவள் பேசி முடிக்கவில்லை அவன் திடீரென உன்மத்தம் கொண்டவனாய்த் தான் தீவிரமாக அன்பு செலுத்தியும் அவள் தன்மீது அன்பில்லாமல் நடந்து கொள்கிறாளே என்று எண்ணியவனாய், அவளது கன்னத்தில் அறைந்துவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றான். அந்த அடி அவளுக்கு வலிக்கவில்லை. அவனது அன்பு, அவன் தீவிரமான ஒரு லட்சிய வெறியுடன் காதலிப்பது அவளுக்குப் புரிந்தது. காதல், இலட்சியம் என்ற தங்கக்கோபுர நினைவுகள் அனைத்தும் அர்த்தமற்றவையென்பது அவளது முடிவு. இருந்தும் எவனோ ஒருவனை மணக்க வேண்டும். அவன் இவனாக இருந்துவிட்டுப் போகட்டுமே என்று நினைத்தபடி விடுதிக்குத் திரும்பினாள். அன்றைய சம்பவங்களின் பின் ஒருவார காலமாக அவன் அவளைச் சந்திக்கவில்லை. இந்த ஒருவாரமும் அவனை அவள் அடிக்கடி நினைத்துக் கொண்டாள். அவனது குழந்தைத் தனமான முகம், அதில் விசமத்தனமாக குறுகுறுக்கும் கண்கள், சிவந்த உதடுகளுக்கு மேலாய்ப் படர்ந்துகிடக்கும் அடர்த்தியான மீசை, அனைத்தும் அவளை அவன்பால் ஆர்வங்கொள்ளவே வைத்தன. அவனுக்காக அவள் லேசாக ஏங்குவது போன்ற உணர்வின் உறுத்தல் வேறு, அவளால் தன்னையே நம்ப முடியவில்லை. அவனது கொம்பனிக்கு போன்பண்ணிப் பார்ப்போமா என்று நினைத்தவள் அந்த எண்ணத்தையே மாற்றிக்கொண்டாள். அவனே தன்னிடம் பேசக்கூடும் என எதிர்பார்த்தாள். எதிர்பார்த்தது போலவே இரண்டு நாள் கழித்து, அவள் கந்தோரிலிருந்த சமயம் அவன் இவளுடன் போனில் தொடர்பு கொண்டு மாலை கந்தோர் முடிந்ததும் விடுதிக்கு வருவதாகச் சொன்னான். அப்போது அவளும் ஏதோ பேச முயன்றாள். அவள் பேசுவதற்கு முன்பாகவே அவன் போனை வைத்தது அவளுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது. மாலை அவள் விடுதியிலிருந்தபோது அவளைத் தேடிக் கொண்டு முதலில் வந்தவன் ' அருண் தான் '. தான் புதிதாக எழுதிய கதையினைக் காட்டி அவளது கருத்தினை அறிய வந்திருந்தான். பிரசுரத்திற்குப் போகுமுன் பரஸ்பரம் அவர்கள் கருத்து பரிமாறிக் கொள்வதுண்டு. அவர்கள் கதையின் உள்ளடக்கத்தைப் பற்றித் தீவிரமாக அலசிக் கொண்டிருந்தபோது தான் அவன் அங்கே வந்தான். அவனை வாருங்கள் என்று கூறியதுடன் அருணையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பின் கதையைப் பற்றியே அதிகம் பேசியது இவனுக்கு மிகுந்த எரிச்சலை ஊட்டியது. இருந்தும் பொறுமையாக இருந்தான். அருணை அ னு ப் பி வி ட் டு த் திரும்பியவள் இவனைப் பார்த்து கோப்பி சாப்பிடுங்கள் என்று உபசரித்து பிளாஸ்கிலிருந்து



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்





கோப்பியைக் கொடுத்துவிட்டு, இதோ ஒரு நிமிஷத்தில் வாரன் என்று உள்ளே சென்றாள். தன்னை அலங்கரித்துக் கொண்டு வெளியே வந்தவள் நூல்நிலையம் வரைக்கும் போய்வருவம் என்று அவனை அழைத்தாள். அவன் ஏதும் பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தான். ' என்ன கோபமா ' அவன் எதுக்கு என்றான். '' இல்லை அண்டைக்கு என்னடமாதிரி கோபத்திலே உங்களை மறந்து என்னை அடிச்சீங்க '' '' ஓ என்னை மன்னிச்சிடு உனக்கு என்ர அனபு விளங்கேல ''. '' விளங்காமலா உங்களுடன் வெளிக்கிட்டிருக்கிறன் ''. '' வெளிக்கிட்டது சரி'' ஆனா இது இடைநடுவிலே நிக்காது என்றுதான் நான் நினைக்கிறன் என்றான். அவர்களிருவரும் வெகுநேரம் தற்கித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். ''

இன்னும் சில தினங்களில் பதிவுத் திருமணத்தை வைத்துக் கொள்வோம் என அவன் நச்சரித்தான். அவள் மௌனமாகப் புன்னகை பூத்தாள். அந்த மௌனம். புன்னகை எல்லாம் அவளது காதலை உணர்த்தியிருக்க வேண்டும. அவன் சூழ்நிலையை மறந்தவனாய் அவளது காதின் கீழ்ப்புறத்தில் கழுத்தில் முத்தமிட்டான். அந்த இனிமையான சந்திப்பின் பின் ஒருவார காலத்தில் அவர்களிருவரும் பதிவுத்திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களது திருமணத்திற்கு அவனது நெருங்கிய நண்பர்கள் சிலரும் இவளது தோழிகளும், அருணும் வந்திருந்து வாழ்த்தினர். இவர்களது பெற்றோர்களுக்கு இதுவிடயம் உடனே தெரியாது. தெரிந்தபோது இவர்கள் எதிர்பார்த்தது போல் எந்த பூகம்பமும் வெடித்து விடவில்லை. அவளது பெற்றோர்கள் மகிழ்ச்சி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் அவனது தகப்பனார் கொஞ்சம் இரத்த அழுத்தப் பேர்வழி ஏதோ ஆவேசத்துடன் கிறுக்கியிருந்தார். எல்லாம் வழமையான பல்லவிதான். '' உனக்கு இந்த வேலை செய்ததற்குச் செப்பாலடிச்ச சல்லிக்காசு கிடையாது. நீ இந்தப்பக்கம் அந்தச் சாதிகெட்டதோட வருவியா பாப்பம் '' என்று அற்பத்தனமான பிரலாபங்கள். அவன் கடிதத்தைப் படித்துவிட்டு இவளிடம் கொடுத்தான். இந்த கிழவரிடம் என்ன இருக்கிறது வரட்டுச்சாதிப் பெருமையைத் தவிர இருந்த நிலத்தையும் சும்மா இருந்தே சீட்டாடியும் குடித்தும் குலைத்துவிட்ட இவரை எந்த நிலையிலும் ஒரு பாதுகாப்பாக சந்திரு நினைச்சிருப்பாரா இருக்காது. இவரது தனவந்த தனமெல்லாம் உண்மைக்குப் புறம்பான வெறும் கற்பனைதான். சும்மாயிருந்து சுகித்த பேர்வழி - உள்ளதையெல்லாம் சிதைத்து சாதி வெள்ளாளர் என்ற பட்டயம் மட்டும் எஞ்சி நிற்குமிவர் மிகவும் இரக்கத்துக்குரியவர் என்றெல்லாம் நினைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரையும் இவை எந்த விதத்திலும் அன்று பாதித்துவிடவில்லை.

பழைய நினைவுகளில் மனதை அலையவிட்டவள் படபடவென கதவு தட்டப்படும் ஓசைகேட்டு எழுந்து திறந்தாள். அவன்தான் வந்திருந்தான். வழமைபோல அவன் முகம் சுரத்தற்று -ஆனால் சற்று கடுகடுப்புடன் இருந்தது. அவள், அவர்கள் மணவாழ்வில் ஈடுபட்ட ஆரம்பநாட்களில் அவன் முகம் இருந்த மலர்ச்சியை ஏனோ அப்போது நினைவு கூர்ந்தாள். அவன் வந்ததுமே கோப்பி குடிப்பான். எனவே அதனைத்தயாரிப்பதற்காக உள்ளே போனவள், மீண்டும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனது முகத்தோற்றம் ஏனோ அவளுக்கு மிகுந்த பயத்தையூட்டயது. அவன் இப்போது சிலநாட்களாக, சீதனம் என்று ஏதோ பிதற்றி சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இவளை அநாகரிகமாக ஒன்றுக்கும் வக்கில்லாத தரித்திரம் பிடித்தவள் என்றெல்லாம் திட்டித்தீர்ப்பது வழக்கமாகி விட்டிருக்கிறது. ஊரில் ஏதோ சொற்ப காணி இவளது பேருக்கு உண்டு. அதனையே விற்று, அவன் இவளைச் சீதனம் தரும்படி நச்சரித்தபோது இவள் அவன்பால் முதல்முதலாக வெறுப்புக் கொண்டாள்.அந்த வெறுப்பு அவன் அந்தப் பிரச்சினைப் பற்றி பேசும்போதெல்லாம் அதிகரிக்கவே செய்தது. அதைப்பற்றி ஏதாவது அவன் பேச விரும்புகிறானோ, அந்த அநாகரிகமான வார்த்தைகளை, வசைகளை அவளும் கேட்கத் தயாராக வேண்டுமா? வேண்டியதில்லை.....! அந்த நினைப்பே அவளுக்கு நிம்மதியைத் தருகிறது. இன்றுதான் அவளது தகப்பனார் காணியை விற்று அவளது பெயருக்கு வங்கியில் பத்தாயிரம் வரையில் போட்டிருப்பதாக எழுதியிருக்கிறார். அந்த விஷயத்தை அவள் அவனுக்குச் சொன்னபோது அவனது முகத்தில் லேசான மலர்ச்சி. அந்த மலர்ச்சியும் ஏனோ கணநேரம்தான் நிலைத்தது. மீண்டும் அவனது முகம் இறுக்கமுற்றுக் கடுமையானதை அவள் அவதானித்தாள். ' இது ஏன் '? அவள் சஞ்சலமுற்றாள். சிநேகிதி ஒருத்திக்குச் சம்பளம் எடுத்த கையோடு அவள் கொடுத்த கைமாற்றுப் பணம் பற்றித்தான் இவன் கேட்கப்போகிறானோ? கேட்டு அந்த சிநேகிதி இன்னும் தரவில்லை என்றுஇவள்சொல்ல, அவன் அர்த்தமில்லாமல் இவளை ஏசுவதற்கு தயாராக இருக்கிறானா? அல்லது ஏதாவது புதிதாகக் கற்பிதம் பண்ணித் திட்டித்தீர்க்கத் தன்னை தயார்ப் படுத்துகின்றானா? ஒன்றுமே புரியாமல் அவள் குழம்பினாள்.

அவள் சம்பளம் எடுத்ததும் பணம் முழுவதையுமே இவன் வாங்கி வைத்துக் கொள்வது வழக்கம். பின் அவளது தேவைகளுக்குக்கூட இவனிடம்தான் அவள் பணம்வாங்க வேண்டும். எதற்குமே அவனை எதிர்பார்ப்பது இவளுக்கு என்னவோ போலிருந்தது. எந்த விஷயத்திலும் அவன் சொல்வதையே இவள் கேட்டு நடக்க வேண்டுமாம். அதுதான் மனைவிக்கு லடசணமாம். அப்போது தான் குடும்பம் குடும்பமாக இருக்குமாம். அல்லது சீரழிந்துவிடுமாம். சீரழிந்து விட்டால் இவள் தெருவில்தான் நிற்க வேண்டுமாம். இதெல்லாம் அவளுக்கு அர்த்தமாக வில்லை. மிகவும் கட்டுப்பெட்டித்தனமான அந்த ஆணின் அதிகார வரம்பை அவள் ஓரோர் சமயம் உடைத்தெறிய விரும்புவதுண்டு. விரும்பும் அளவுக்கு இவள் துணிவதில்லை. அவள் மிகவும் பொறுமையாகவே இருந்தாள். அப்போதெல்லாம் அவளது மனம் அவளது பெற்றோர்களை, அவர்களது வாழ்க்கையை நினைத்துப் பிரமித்துப் போகும். ' ஆச்சியும் அப்புவும் ஏழைகள்தான். எளியதுகள்தான். இருந்தும், என்னகுறை அவையின்ரை வாழ்கையிலை! ஆச்சி கல்லுடைக்கப் போனால், அப்பு உழவுக்குப் போவார். அவ அரிவுவெட்டப்போனால் இவர் சூடுவைக்கப்போவார். இருவருமே உழைத்தார்கள். இருவருமே குடும்பம் அதுஇதென்று ஒருமித்துச் செயற்பட்டார்கள். அப்புவின் அபிப்பிராயங்களை அவர் கேட்பதும்.......'ஓ! அவர்களது அந்த வாழ்க்கை எவ்வளவு அர்த்தமும் மகத்துவமும் நிரம்பியது'. அப்படிப்பட்ட சூழலில் வளர்ந்து, வாழ்ந்து பழகிய அத்துடன் அறிவுக் கூர்மையும் மிக்க இவளுக்கு, இருவருடைய வாழ்க்கையிலும் உள்ள வெறுமை புரியமே செய்தது.

அவனது போக்கு இவளுக்கு ஒரு சமயம் பிடிபட்டும், பிடிபட மறுத்தும் அலைக்கழித்தது. இந்த முரண் சிறுகச்சிறுக அவர்களது குடும்ப வாழ்வின் அமைதியைக் குலைத்து விடுமோவென்று அவள் பயந்தாள். அதுமட்டுமல்ல, அவள் மிகுந்த பயத்துடன் எது நடக்கக்கூடாதென்று எதிர்பார்த்திருந்தாளோ அது அவளது வாயாலேயே அவள் எதிர்பாராத வகையில் வெளிப்பட்டபோது அவள் மிகுந்த வேதனையுற்றாள். அவன் இப்போது அடிக்கடி பயன்படுத்தும் வார்த்தைகள் ' சாதி சனத்துக்கை சடங்கு முடிச்சிருக்கலாம். எளியதுகளை முடிச்சால் இப்படித்தான் கிரிசைக்கெட்டு அலையவேணும்'. அவள் இந்த வார்த்தைகளால் மனம் தளர்ந்துதான் போனாள். தன்னை மறந்தநிலையில் புதியதும் பழையதும் அசைபோட்டவளுக்கு, '' ஐயோ



கோப்பி கேட்பானே'' என்ற நினைப்பு வந்ததும், பாலில்லாமல் கோப்பியைத் தயாரித்துச் சென்றாள். அவன் கோப்பியை வாங்கித் திடீரென அவளை நோக்கி வீசினான். அவள் சற்று ஒதுங்கவே அது அவளது இடது தோளில் பட்டுச் சிதறியது. சுடுகோப்பி பட்டதும் துடித்தவள், '' சீ... என்ன பயித்தியம் மாதிரி ... '' என முணுமுணுத்தாள். '' ஓமோம் பயித்தியம் தான், உன்னோட இருந்தால் பயித்தியம்தான் வந்திடும்.... '' '' சத்தம் போட்டு பேசாதீங்கோ ..... வெட்கமாயிருக்கு ' ' .

'' எது, எதடி வெட்கம் ஊரெல்லாம் அவன் அந்த அருணோட சுத்தறது வெட்கமில்லை... நா .... நான் பேசுறது தான் அவவுக்கு வெட்கமாயிருக்கு ''. அவன் புதிய பிரச்சினையொன்றில் சிக்கித்தவிக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. இதுவரை அல்லாத பிரச்சினை. அதுபற்றி இன்று பேச ஆரம்பித்தான். இன்று காலை பத்துமணியளவில் அவள் தனது கதைத் தொகுதிக்கு' கோட்டேசன் ' எடுப்பதற்கு ஆட்டுப்பட்டித் தெருவரைக்கும் போகவேண்டியிருந்தது. சோட்லீவில் போயிருந்தாள். வழியில் அருணைக் கண்டு அவனுடன் அச்சகம் வரை போனதைப் பார்த்துவிட்டு இவன் இப்படி நடந்து கொள்கிறானே என நினைத்தவள்: '' அதா ..... அது ..... நான் ..... '' '' போதும் போதும் உன்ரை பசப்பல் ..... அவன் சச்சி இதைச் சொல்லேக்க எனக்கு இடுப்பில சேலையில்லை ''. '' அவன் சொல்லுறதை நம்பிறயல் ..... நான் சொல்லுறதை ..... '' '' ஓ! நீ சொல்லுறதை நம்புறன் ..... நல்ல வடிவா நம்பிறன், உனக்கு கதை .... கதையெண்டு அவனோட சுத்துறது இப்பசாட்டாப் போச்சுலே ..... '' அவள் மௌனமானாள். அவளது மௌனம் அவனைக் கோபமூட்டியது. அவன் அவளை மேலும் வம்பிற்கிழுத்தான்.

அவளுக்கும் அருணுக்கும் தொடர்பிருப்பதாகவும், அந்த தொடர்புகளுக்கு இடைஞ்சலாகத் தான் இருப்பதாக அவன் நினைப்பதாகவும், கையும் மெய்யுமாக இருவரையும் பிடித்து மானபங்கபடுத்தப் போவதாகவும், ஏதேதோ கூறி அவன் மேன்மேலும் தன்னைச் சிறுமைப் படுத்திக் கொண்டான். அவளால் என்ன செய்ய முடியும். அவனுக்கு இந்த நிலையில் என்ன சமாதானம் சொல்லமுடியும். அவள் தனது தூய்மை பற்றி அவனுக்குச் சொல்வதையே அப்போது அவமானமாகக் கருதினாள். அப்படி அவள் சொன்னாலும் இவன் நம்புவானா ? நம்பமாட்டான் என நினைத்தவளாய் பொறுமையாக இருந்தாள். இவள் பொறுமையாக ஏதும் பேசாமல் இருந்ததே அவனுக்கு மிகுந்த எரிச்சலூட்டியது. அவன் ஆவேசம் கொண்டவனாய், அவள் மேல் பாய்ந்து தனது பலம் முழுவதையும் சேர்த்து அடித்தான். இப்படிப்பட்ட நிலைகளில் அவன் அடிப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. ஒரு குரூரமான ' ஸடிஸ்ட் 'டாக மாறிவிடுவான். அவனது கரங்கள் அவளை – அவளது உடலை புதுவிதமாகப் பரிசீலித்தன. அவள் எதையோ இழந்துவிட்டது போலவும், அதை இவன் கண்டுபிடித்து நிரூபிப்பது போலவும் முயற்சிகள். அவள் முதல் முறையாக அவன் மீது இது விஷயத்தில் வெறுப்புற்று அவனைப்பிடித்துத் தள்ளினாள். அவன் மிகவும் வெட்கங்கெட்டதனமாக '' நீ ..... இன்று அவனுடன் .....? '' அவன் சொல்லி முடிக்கவில்லை. அவள் தூ ! நீயும் ஒரு மனுசனா என்று விம்மினாள்.

அவளுக்கு எல்லாமே அர்த்த மற்றதாகத் தோன்றியது. பின் ஏதோ நினைத்துக் கொண்டவளாய்த் தன் இயல்புகளுக்கு மாறாக அவனை மேலும் எரிச்சலூட்ட விரும்பியவளாய் '' ஓம் இன்று அருணோடை அவன்ரை அறையில்தான் இருந்தனான் '' என்று பொய் சொன்னாள். ஏதோ எச்சில் பழத்தை, அழுகிய பண்டத்தைத் தொட்டது போன்ற அருவருப்புடன் முகம் சுளித்து அவன் அவள் முகத்தில் காறி உமிழ்ந்தான். அவனது அந்த அநாகரிகமான செயல் அவளை மிகவும் பாதித்தது. உடைபட்ட நெஞ்சுடன் அவள் விக்கித்து நின்றாள். அப்போது, அவன் திடீரென குலுங்கி குலுங்கி பெரிதாகச் சத்தம் வைத்து அழுதான். ஆண்மகன் ஒருவன் அழுவதை அவள் கண்டதில்லை. அந்த நிலையிலும் ஆண்மை அழுவது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அவள் தனது துயரங்களை ஒருகணம் மறந்தவளாய் லேசாகச் சிரித்துக் கொண்டாள். அவன் ஏன் அழுகின்றான் என்பது அவளுக்குப் புரிந்தது. அர்த்தமில்லாமல் ஏதேதோ கற்பனைகளைக் கற்பிதம் பண்ணி அழுவதற்கு அவள் என்ன செய்யமுடியும்? அவனது பலவீனம் அவளுக்கு அதிசயமாக இருந்தது. அருவருப்பாக இருந்தது. அவனது செயல்கள் யாவும் அவன் மீது அவள் கொண்ட அன்பை, அனுதாபத்தைக் குலைத்தன. அவள், இவன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான், என்று ஆய்வதிலும் பார்க்க – இவன் தன்னுடன் இனியும் ஒட்டி உறவாடத்தான் முடியுமா என்று தன்னையேக் கேட்டுக் கொண்டாள். இப்படி உணர்ச்சிகளைச் சீண்டி வேடிக்கைப் பார்க்க இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது ? அந்த உரிமை இதற்கெல்லாம் இடம் கொடுக்கிறதா ? இந்த திருமணம் என்ற பந்தமே எவ்வளவு கட்டுப்பெட்டித்தனமாக மலினப்படுத்தப்பட்டுவிடுகிறது.

அவளுக்கு ஏனோ அழவேண்டும் போலிருந்தது. அவளும் அழுதாள். அப்போது ஒருமுறை குலுங்கிகுலுங்கி அழுதான். அவளுக்கு அவன்பால் எவ்வித பரிவும் ஏற்படவில்லை. மனதில் இருந்த துயரை உதறியெறிந்தவள், எழுந்து உள்ளே போய் குழாயடியில் முகத்தைக் கழுவிக்கொண்டு வந்து சமைப்பதற்காக வெட்டி வைத்திருந்த காய்கறிகளை ஒதுக்கிவைத்துவிட்டு, அவனது கட்டிலுக்குப் பக்கத்தில் நிலத்தில் பாயை விரித்து ஒன்றுமே நடவாதது போலப் படுத்துக் கொண்டாள். அவனது அழுகை சிறு விசும்பலாக மாறி ஓய்ந்தது. இருவரும் துயரங்களால் அலைபட்ட களைப்பால் அயர்ந்து தூங்கினார்கள். இல்லை ! அவள் மட்டும்தான் உறங்கினாள். உறக்கத்தில் புரண்டவள் விழிப்புற்றுக் கட்டிலைப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. அவன் எங்கே ? குழாயடியில் லைற் எரிந்து கொண்டிருந்தது. பரபரப்புடன் எழுந்தவள் போய் பார்த்தாள், அங்கவன் இல்லை. மீண்டும் வந்து அறை லைற்றைப் போட்டுப் பார்த்தாள். அவனது பெட்டிபடுக்கை, உடமைகள் என்று எதுவுமே அங்கிருக்க வில்லை. அவளுக்கு அதிர்ச்சியும் அதிசயமும் கலந்த உணர்வு நிலை. அவள் வழமையாக கந்தோரிலிருந்து வந்ததும் கழற்றி வைக்கும் தாலிக்கொடியை புத்தக அலமாரியின் இடதுபக்கத்து மூலையில் தேடினாள். அது அங்கில்லை. அவன் அதனை.... அதனையும் .....?

அவளது மனம் அதை நம்ப மறுத்தது. சீ..... இப்படியுமா நிமிடக் கணக்கில் வாழ்வின் கட்டுகளைத் துண்டித்துக் கொள்ளமுடியும், எதிலுமே அவசரப்படும் அவன் இதிலும் அவசரப்பட்டுவிட்டானே ..... ? அவளுக்கு அவன் திருமணத்தன்று வாங்கித்தந்த கூறையும், இரண்டாம் பட்டும் நினைவுக்கு வருகிறது. தனது பெட்டியைத் திறந்து பார்த்தாள். அவன் அவசரக்காரன் மட்டுமல்ல. அற்பத்தனமானவனும் கூட என நினைத்தாள். அவளது பார்வை ஏதேச்சையாக கண்ணாடிப் பீடத்தில் தரித்தது. அங்கு குங்குமச் சிமிழ். இதையும் அவன்தானே பரிசாக வாங்கித் தந்தான். இதனையும் அவன் கொண்டு போயிருக்கலாமே என நினைத்தவள், ஓ ..... நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்படுகிறேன்..... இல்லை.... ? என அரற்றினாள். அவளுக்கு அப்போது ஏனோ லூ ஸுனின் கதை ஒன்றில் வரும் ஷுகன் என்ற பெண்ணும், இப்சனின் நோராவும் நினைவுக்கு வந்தார்கள்.

அவர்களைப் போல இவளால் தாம்பத்திய உறவை வெட்டிக்கொள்ள முடியவில்லைத்தான். ஆனால், அவர்களைப் போலவும் நடந்து கொள்ளாமல் இவள் இருப்பதற்கு அவனே வழி செய்திருப்பது இவளுக்கு ஒருவகையில் நிம்மதியாக இருந்தது. இந்த நிம்மதியே அவளுக்கு இப்போதைக்குப் போதுமானது. அவள் நிம்மதியாக பெருமூச்செறிந்தாள்.



# இம்மாதம் இப்படித்தான் டிசம்பர் 2004

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

## மேடம் : ( அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம் )

அரசால் அனுகூலம் உண்டு. குடும்பத்திலும் சாதகமான, மகிழ்ச்சியான சூழல் உண்டாகும். எதிர்பாராத திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். கட்டிட, வாகன வசதி கூடும். பணவரவு உண்டு. அலைச்சலுடன் சில காரியங்கள் முடியும். வழக்குகள் சாதகமாகும். பழைய பணம் வரும். செலவுகளைக் கண்டு அஞ்சுவீர்கள். சகோதரரால் அலைச்சல் ஏற்படும். கருத்து வேறுபாடுகளும் வெடிக்கும். அனுசரித்துப் போவது நல்லது. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மனைவி உறவில் சுபகாரியம் நடக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். பற்று வரவு உயரும். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். உத்யோகத்தில் சக ஊழியர்களிடையே அதிருப்தி வந்து போகும். மாணவர்களின் மதிப்பெண் கூடும். கெட்டவர்களிடமிருந்து விலகுவீர்கள். கன்னிப் பெண்களின் உயர்கல்வி வெற்றியடையும். கல்யாணப் பேச்சு வெற்றியில் முடியும். சிலவற்றைச் சாதிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 10, 11, 12ஆம் தேதி காலை 8.30 மணிவரை
இராசியான எண்கள் : 1, 5
இராசியான நிறங்கள் : ப்ரௌன், மெரூன்

## இடபம் : ( கிருத்திகை 2, 3, 4ம் பாதம்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள் )

குடும்பத்திலுள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது நல்லது. கொஞ்சம் அலைச்சல், வாக்குவாதங்களெல்லாம் வந்து போகும். முன் கோபம் தவிருங்கள். சந்தேக மனப்பான்மை வேண்டாம். தொண்டைவலி, தொண்டைப்புகைச்சல் வந்து போகும். வாகனம் வாங்குவீர்கள். ஆனால் மிதமான வேகம் நல்லது. மகான்கள், சித்தர்களின் ஆசி கிட்டும். பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவார்கள். பெண்ணிற்கு நல்ல வரன் அமையும். பையனுக்கு வேலை கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. பழைய கடன் பிரச்சனையொன்றால் மனம் பாதிக்கும். கடனை பைசல் செய்ய முயல்வீர்கள். புதுக் கடன் உதவி கிட்டும். வெளி வட்டாரம் இனிக்கும். கௌரவப் பதவிகள் கிட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். பங்குதாரர்களிடையே ஒற்றுமையுண்டாகும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். புது சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் பரிசு பெறுவார்கள். கன்னிப் பெண்களின் காதல் இனிக்கும். சந்தர்ப்ப சூழலை அனுசரித்துச் சாதிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 12ஆம் தேதி காலை 8.30 மணி முதல் 13, 14ஆம் தேதி காலை மணி 11.15 வரை
இராசியான எண்கள் : 6, 7
இராசியான நிறங்கள் : ரோஸ், வெள்ளை

## மிதுனம் : ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)

பரபரப்பாக காணப்படுவீர்கள். தடைப்பட்ட காரியங்கள் உடனே முடியும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். கணவன், மனைவி உறவு இனிக்கும். விவாதங்கள் விலகும். பணவரவு அதிகரிக்கும். எதிர்ப்பார்த்த உதவிகள் பிரபலங்களிடமிருந்து கிடைக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பதில் தடைகள் விலகும். ஆடை, ஆபரணம் சேரும். உறவினர்கள், நண்பர்களிடமிருந்த கசப்புணர்வு விலகும். புதுக்கடன் வாங்கி பழைய கடனைப் பைசல் செய்வீர்கள். குழந்தை பாக்கியம் உண்டாகும். ஷேர் லாபம் தரும். சகோதரி உதவுவார். வழக்கு சாதகமாகும். வாகனம் வாங்குவீர்கள். நவீன எலக்ட்ரானிக்ஸ், மின் சாதனங்கள் வந்து சேரும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். பங்குதாரர்களிடையே நிலவிய கசப்புணர்வு நீங்கும். புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்யோகத்தில் மறைமுகமாக எதிர்த்தவர்கள் எல்லாம். மனம் மாறி ஆதரவாக நடந்து கொள்வார்கள். தூக்கமின்மை, கனவுத்தொல்லை வந்துபோகும். மாணவர்கள், கன்னிப்பெண்கள் சாதிப்பார்கள். சவால்களை வெல்லும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 14ஆம் தேதி காலை மணி 11.15 முதல் 15, 16ஆம் தேதி காலை மணி 8.10 வரை
இராசியான எண்கள் : 1, 6
இராசியான நிறங்கள் : பச்சை, கிரே

## கடகம் : ( புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம் )

மாதத்தின் மத்தியிலிருந்து செல்வாக்குக் கூடும். குடும்பத்தில் அமைதியுண்டு. சிக்கல்கள் தீரும். அம்மாவின் உடல்நலம் சீராகும். மருத்துவச் செலவுகள் மாறி மாறி வரும். பிள்ளைகளின் ஆரோக்யம் பாதிக்கும். வீடு கட்டும் பணியில் இருந்த தடைகள் நீங்கும். உறவினர்கள், நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். காதல் இனிக்கும். கல்வித்தகுதியை அதிப்படுத்திக் கொள்வீர்கள். வேற்று மனிதர்கள் உதவுவார்கள். வேலை கிடைக்கும். திருமணத் தடைகள் நீங்கும். கௌரவப்பதவிகள் தேடி வரும். வியாபாரத்தில் புது யுக்திகளால் ஆதாயம் அதிகரிக்கும். பங்குதாரர்கள் புதியவர்களைச் சேர்ப்பீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் ஆதாயம் தரும். உத்யோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய முடிவுகளை உங்களுடன் கலந்தாலோசிப்பார்கள். மாணவர்களின் படைப்புத்திறன் கூடும். கன்னிப்பெண்கள் புது நட்பால் மகிழ்வார்கள், தடைகள் உடைபடும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 16ஆம் தேதி காலை மணி 8.10 முதல் 17, 18ஆம் தேதி வரை
இராசியான எண்கள் : 3, 7
இராசியான நிறங்கள் : மஞ்சள், ஊதா


**சிம்மம்** : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



அரைகுறையாக நின்ற பல காரியங்கள் உடனே முடியும். மனக்கவலைகள் விலகும். பணம் பல வழிகளில் வரும். லாட்டரி, ஷேர், ஸ்பெகுலேஷன் வகைகள் நல்ல லாபம் தரும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் கூடும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் உடனேமுடியும். உறவினர்கள், நண்பர்கள் வளைந்து வந்து பேசுவார்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும். ஆடை, அணிகலன் சேரும். அக்கம், பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நாடாளுபவர்களின் நட்பு கிட்டும். புது வேலை கிடைக்கும். உத்யோகம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புது முதலீடுகள், புது ஒப்பந்தங்களை எதிர்ப்பார்க்கலாம். அன்னிய நாட்டுப் பயணங்கள் ஆதாயம் தரும். கன்னிப் பெண்களின் காதல் கனியும். உயர் கல்வி வெற்றி பெறும். கலைஞர்கள் பரிசு பெறுவார்கள். உன்னதமான மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 19, 20ஆம் தேதிகளில் நிதானம் தேவை
இராசியான எண்கள் : 6, 9
இராசியான நிறங்கள் : சிவப்பு, மெரூன்

**கன்னி** : ( உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள் )



சுக்ரபலம் மாத மத்தியப் பகுதி வரை வலுவாக நிற்பதால் பொருளாதாரம் உயரும். நீண்டகால எண்ணங்கள் நிறைவேறும். மாதப்பிற்பகுதியில் அங்காரகன் பலமடைவதால் சொத்துச் சிக்கல் தீரும். பழைய கடன் தீரும். புதுக் கடன் உதவியும் கிடைக்கும். பழைய நண்பர்களைக் கொஞ்சம் ஒதுக்கி வைப்பீர்கள். கணவன், மனைவி உறவு சுமுகமாக இருக்கும். ஆனால் அவ்வப்போது சந்தேகமும், முன் கோபமும் வந்து போகும். ஞானவான்களின் நட்பு கிட்டும். புதியவர்களின் நட்பால் முன்னேறுவீர்கள். வெளிவட்டம் விரியும். சளைக்காமல் போராடி நீங்கள் சாதித்து வருவதைக் கண்டு உறவினர்கள் சிலர் ஆச்சர்யப்படுவார்கள். பெண்ணிற்குக் கல்யாணம் முடியும். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புது யுக்திகளைக் கையாளுவீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்யோகத்தில் உங்களுக்குச் சாதகமாக எல்லோரும் நடந்து கொள்வார்கள். மாணவர்கள் கணிதத்தில் வெல்வார்கள். கனவுகள் நனவாகும் காலமிது.

சந்திராட்டம தினங்கள் : 21, 22ஆம் தேதிகளில் கவனம் தேவை
இராசியான எண்கள் : 5, 6
இராசியான நிறங்கள் : கிரே, பச்சை

**துலாம்** : ( சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள் )



வலுவான பாதையை தேர்ந்தெடுப்பீர்கள். கடந்த கால கசப்புகளை கடந்து சாதிக்க புது திட்டங்கள் தீட்டுவீர்கள். கோபம் தணியும். வீட்டிலுள்ளவர்களின், உறவினர்களின் உணர்வுகளை புரிந்து கொள்வீர்கள். பழைய நண்பர்களை மீண்டும் சந்திப்பீர்கள். பிள்ளைகளின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். புது எலக்ட்ரானிக்ஸ், மின் சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனப் பிரச்சனை தீரும். வீடு மாறுவீர்கள். பழைய கடனை பைசல் செய்ய புது வழி கிடைக்கும். வேற்று மதத்தினர், நாட்டினர் வாயிலாக வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள். பங்குதாரர்களிடையே புதுக்குழப்பம் தீரும். லேசாக வயிற்று வலி, காது வலி வந்து போகும். சகோதரியின்திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள் உத்யோகம் உற்சாகம் தரும். கன்னிப் பெண்கள், மாணவர்களுக்கு பரிசு பாராட்டுகள் கிட்டும். வெற்றிகளை முத்தமிடும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 23, 24, 25ஆம் திகதி மாலை மணி 4 வரை
இராசியான எண்கள் : 2, 6
இராசியான நிறங்கள் : நீலம், வெள்ளை

**விருச்சிகம்** : ( விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை )



சாண் ஏறினால் முழம் சறுக்கிய நிலை மாறும். பேச்சில் மிடுக்குத் தெரியும். நண்பர்கள், உறவினர்கள் வருகை அதிகரிக்கும். வீண் குழப்பம் விலகும். கொஞ்சம் காய்ச்சல், சளி தொந்தரவு வந்து போகும். உல்லாசப் பயணங்கள் சென்று வருவீர்கள். விவாதங்களில் வெல்வீர்கள். கணவன் மனைவி உறவு மேம்படும். மனைவி வழி உறவில் சுபகாரியங்கள் நடக்கும். லாட்டரி, ஷேர் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வேலை கிடைக்கும். கல்யாணத் தடைகள் நீங்கும். பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். உத்யோகத்தில் பிரச்சனைகள் தீரும். பணியில் நிரந்தரமாக்கப் படுவீர்கள். புது வாய்ப்புகள் கதவைத் தட்டும். வியாபாரத்தில் உங்களின் கை ஓங்கும். புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்களின் மதிப்பெண் கூடும். விளையாட்டில் பதக்கம் உண்டு. கன்னிப்பெண்களுக்கு நல்ல செய்திகள் தேடி வரும். துணிந்து செயல்படும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 25ஆம் தேதி மாலை 4 முதல் 26, 27 தேதிகளில் நிதானம் தேவை
இராசியான எண்கள் : 6, 7
இராசியான நிறங்கள் : ப்ரௌன், நீலம்

**தனுசு** : ( மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



ஒரு பக்கம் செலவாகும். அலைச்சல்கள் இருந்தாலும் மற்றொரு பக்கம் சாதித்துக் கொண்டே இருப்பீர்கள். வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வழக்கால் ஏற்பட்ட சிக்கல் தீரும். திடீர்ப் பயணங்களில் திருப்பம் உண்டாகும். புது நண்பர்களால் ஆதாயம் அடைவீர்கள். பிள்ளைகள் சாதிப்பார்கள். வீட்டில் சுபகாரியம் நடக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வந்து சேரும். தந்தை வழியில் அலைச்சல், செலவு வந்து போகும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். குழந்தை பாக்கியம் உண்டாகும். அரசு அதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். அக்கம் பக்கத்தில் புகழ் கூடும். வியாபாரத்தில் கணிசமான லாபம் உயரும். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்பகள். புரோக்கரேஜ், ஏஜென்சி லாபம் தரும். உத்யோகத்தில் நிர்வாகத்திறன் கூடும். கன்னிப்பெண்கள் கல்வியில் தேறுவார்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். எல்லோரும் உங்களை மதிக்கும் மாதமிது

சந்திராட்டம தினங்கள் : 1, 2, 28ஆம் தேதி நண்பகல் முதல் 30ஆம் தேதி மாலை 4 வரை
இராசியான எண்கள் : 1, 5
இராசியான நிறங்கள் : ஆரஞ்சு, வெள்ளை

**மகரம்** : ( உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள் )

மனசாட்சிக்குட்பட்டு தான் கஷ்டப்பட்ட நேரங்களில் உதவியவர்களைத் தற்சமயம் நினைவு கூர்ந்து கைம்மாறு செய்வீர்கள். குடும்பத்திலுள்ளவர்கள் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். பணவரவு அதிகரிக்கும். வீட்டில் லஷ்மி கடாட்சம் உண்டாகும். உங்களைச் சாதாரணமாக நினைத்தவர்கள் எல்லாம் இப்போது உங்களைப் பார்த்தாலே அஞ்சுவார்கள். பிள்ளைகளுக்குச் சொத்து சேர்ப்பீர்கள். வீட்டில் நல்ல காரியம் நடக்கும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். அரசால் பரிசு, பாராட்டு பெறுவீர்கள். குழந்தை பாக்யம் உண்டாகும். வெளி வட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். ஆன்மீக விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரம் தழைக்கும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் கெடுபிடி குறையும். அதிகாரிகள் பாராட்டுவார்கள். கன்னிப்பெண்களின் ஆசைகள் நிறைவேறும். மாணவர்களுக்குப் பதவிகள் கிட்டும். வசதி வாய்ப்புகள் கூடி வாழ்க்கைத் தரம் உயரும் காலமிது.

சந்திராட்டம தினங்கள் : 3, 4, 5ஆம் தேதி மாலை 5.30 வரை மற்றும் 30ஆம் தேதி மாலை மணி 4 முதல், 31ஆம் தேதி வரை
இராசியான எண்கள் : 1, 9
இராசியான நிறங்கள் : இளம் மஞ்சள், வெள்ளை

**கும்பம்** : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)

தடைகள் குறையும். தன்னம்பிக்கை கூடும். மறைமுக எதிரிகளையும் வீழ்த்துவீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கும். கட்டிடம் கட்டும் பணியில் இருந்த மந்த நிலை மாறும். வீடு, மனையின் பேரில் கடன் வாங்கி புதுத் தொழில் தொடங்குவீர்கள். வேலையில்லாமல் சோர்ந்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். தாம்பத்யம் இனிக்கும். பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள். ஆடம்பரப் பொருட்கள், ஆபரணங்கள் வீடு வந்து சேரும். சகோதரி உதவுவார். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். வேலையாட்களை மாற்றுவீர்கள். புத ஏஜென்ஸி எடுப்பீர்கள். கடையை அழகு செய்து விரிவுபடுத்துவீர்கள். உத்யோகத்தில் உங்கள் பங்களிப்பைக் கண்டு சக ஊழியர்கள் வியப்பார்கள். கன்னிப்பெண்களும், மாணவர்களும் தேர்வில் வெல்வர். அடிப்படைத் தேவைகள் நிறைவடையும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 5ஆம் தேதி மாலை மணி 5.30 முதல் 6, 7ஆம் தேதி வரை
இராசியான எண்கள் : 1, 6
இராசியான நிறங்கள் : பிங்க், கிரே

**மீனம்** : ( பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி,ரேவதி )

கொஞ்சம் அலைச்சல்தான். முன்கோபம் அதிகமாக வருகிறது. எதைத் தொட்டாலும் இழுபறியாக எந்த வேலையும் முடிய மாட்டேங்குது. எதையாவது பேசினால் எப்படியோ தப்பாகிச் சண்டை வலுக்கிறது. இந்த நிலையெல்லாம் வரும் 18ஆம் தேதி முதல் மாறும். அதன் பின் மகிழ்ச்சி கூடும். பணவரவு அதிகரிக்கும். மன உளைச்சல், கவலைகள் நீங்கும். யாருக்காகவும் காரெண்டார் கையெழுத்திட வேண்டாம். கணவன் மனைவி உறவு மாதப் பிற்பகுதியில் இனிக்கும். தந்தையின் உடல் நிலை சீராகும். வாகன விபத்துகள் வரக்கூடும். கவனம் தேவை. வியாபாரம் சூடு பிடிக்கும். வேலையாட்களுடன் ஏற்பட்ட மோதல் போக்கு மாறும். உத்யோகத்தில் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் விலகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். மாணவர்கள் அலட்சியமாக இருக்க வேண்டாம் கன்னிப் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறு வந்து போகும். பிற்பகுதியில் வெற்றி பெறும் மாதமிது

சந்திராட்டம தினங்கள் : 8, 9ஆம் தேதிகளில் கவனம் தேவை
இராசியான எண்கள் : 4, 6
இராசியான நிறங்கள் : வெளிர் நீலம், க்ரீம் வெள்ளை








தொடர்புகளுக்கு திருமுருகன் அறிவகம். தொலைபேசி : 4803320

## RAICON SWEET PONGAL

| Ingredients | Weight | Volume |
|---|---|---|
| Raicon | 50 g | 1/4 cup |
| Green gram dhal | 25 g | 1/2 cup |
| Milk | 100 ml | 1/2 cup |
| Sugar | 75 g | 1 1/2 cup |
| Ghee | 10 g | 2 tsp |
| Cashew nuts | 5 g | 3 pieces |
| Almonds | 5 g | 5 nos |
| Cloves | 0.5 g | 8 nos |
| Cinnamon | 1 g | 1 inch piece |

**Method**

• Roast green gram dhal and keep aside • Pressure cook raicon and green gram dhal with water • Heat ghee and fry cloves and cinnamon, fry cashew nuts and almonds • Add cooked raicon and dhal, sugar and mix well

| | |
|---|---|
| Yield | 380 g |
| Serving size | 125 g |

**Nutritive Value (per 100 g)**

| | |
|---|---|
| Protein (g) | 5.4 |
| Fat (g) | 7.4 |
| Carbohydrate (g) | 47.7 |
| Energy (Kcal) | 279.5 |
| Calcium (mg) | 95.6 |
| Iron (mg) | 0.72 |

# உட்பகை

உலகின் சிந்தனையாளர்கள், அரசர்கள், போதகர்கள், வீரர்கள் என்று பலரின் வாழ்வு உட்பகைகளால் உருமாறிப் போய் இருக்கின்றன. தடுமாறாத தன்னமைத்துவமே எவ்வித இடர்பாடுகளையும் எதிர்கொண்டு ஈற்றில் வெற்றிபெற்றிருக்கிறது. ஆன்மிகம் என்றால் என்ன அரசியல் என்றால் என்ன அனுபவங்களின் வாசிப்புகள் நம்மை வளர்ச்சியடைய வைக்கும். தீயும் நோயுமாகத் தெரிந்த சில வரலாறுகள் இதோ:

ஆண்டவன் யேசு அனைவரையும் அரவணைத்துச் சென்ற அருளாளர். சமமாகச் சகலரையும் மதித்தவர். ஆயினும் அவரது சீடர்களுள் ஒருவனான ' யூதாஸ் காரியத் ' அவர் மேல் பொறாமை கொண்டான். வெறும் முப்பது காசுகட்காக மாத்திரமா அவன் அவரைக் காட்டிக்கொடுத்தான்? இல்லை நிச்சயமாக இல்லை. அவரைப் போல் புகழ் பெற அவன் ஆசைப்பட்டான். அவரது சீடர்களுள் அவனைத் தவிர மற்றையவர்கள் சாமானியர்கள், கிராமவாசிகள், மீனவர்கள், தச்சர்கள், குயவர்கள், நெசவாளிகள். பலர் மதித்துப் போற்ற முனையும் போதும் அவருக்கு அடுத்த இடத்தில் கூடத் தான் வைக்கப்படவில்லையே என்ற எண்ணம் வரும் போது இவனால் பொறுமைகாக்க முடியாமற்போனது. அவனைப் பூரணமாகப் பொறாமைத் தீ ஆட்கொண்டுவிட்டது. இயேசுவை ஒழித்து விட்டால், அடுத்து வரும் தலைமையைப் படித்த - பல மொழிகள் தெரிந்த தான் அடைந்துவிடலாமென ஆசைப்பட்டான். அதன் முடிவு ஆண்டவருக்கான சிலுவையும், யூதாசுக்கான தற்கொலை முடிவுமாயிற்று. உலகில் முதல் ' தற்கொலை ' என்ற தன்னிலை அழிவை ஏற்படுத்திய பெருமைதான் அவனுக்குக் கிடைத்தது.

கௌதம புத்தரின் ஒன்றுவிட்ட சகோதரன் தேவதத்தன். ஒரே ஆசிரியரிடம் கல்விகற்று ஒரே அரண்மனையில் இருந்தவர்கள் இவர்கள். புத்தரின் முதற் சீடரான இவனிடமும் பொறாமைதான் தோன்றியது. தானும் புத்தரும் படிப்பால், பிறப்பால், பயிற்சிகளால் ஒரே நிலையில் இருக்கும்போது தான் மட்டும் சீடனாய் அவர் குருவாய் குடிமக்களால் மதிக்கப்படுவதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவனது உணர்வுகள் அவனை உறங்கவிடவில்லை. அதனால் தொடர்ந்து சீடனாக இருக்க மறுத்துவிட்டான். பிரிந்து சென்றான். தானும் ' ஞானம் ' பெற்றதாகக் கதை பரவ விட்டான். அவன் பின்னாலும் சிலர் கூடினார்கள். புத்தர் அவனுக்கு அறிவுரை கூற முற்பட்டார். அதனால் அவன் அகந்தை தான் கூடியது. அவரிடமிருந்து பிரிந்து சென்றபின் அவரைத் தூற்ற முற்பட்டான் அவரைக் கொல்லவும் திட்டமிட்டான். ஆனால் அவன் உருவாக்கிய உட்பூசல்களின் கொந்தளிப்புகளுக்கு அவனே பலியாகிப்போனான்.

சோக்கிரடீஸ் ; ஏதென்ஸ் நகரத்தில் வீசிய பகுத்தறிவுத் தென்றல். ஆணித்தரமான ஆய்வுகளின் உறைவிடம். கிரேக்கத்தின் சிற்பி. அரசியலுக்கு ' பிளேட்டோ ' என்ற பேரறிஞரைத் தந்தவர். இவரது உற்ற நண்பன் அனீட்டஸ். " கடலலைபோல் நரைத்துவிட்ட தலைமுடிகள் எனக்கும் அனீட்டசுக்கும் " என்று கலைஞரின் சோக்கிரடீஸ் நாடகத்தில் ஒரு வசனமுண்டு. இரண்டுபேருமே இணையற்ற நண்பர்கள். ஆயினும் தன்னைவிடச் சோக்கிரடீஸ் புகழப்படுவதைப் அனீட்டசினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. உள்ளே இருந்து அவரை உருத்தெரியாமல் அழிக்கத் திட்டமிட்டான். ஆனால் சோக்கிரடீசின் சிந்தனைத் திறன், செயல்வேகம், இளைஞர்களை இழுக்கும் அவரது அழகு மொழிநடை, அர்த்தமுள்ள வசனங்கள், இவைகளுக்கு அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. எதிராக இயங்க ஆரம்பித்தான். புரையோடிப்போன பழமைவாதங்களையும், புளுகுகளையும் காட்டி ஆட்சியை அவருக்கு எதிராகத் திருப்பினான். அதன் முடிவு, அந்தச் சிந்தனைச் செம்மல் ஒரு கோப்பை நஞ்சைத் தன் உணவாக்கிக் கொண்டு உதிர்ந்துப் போனது. அவரது மறைவின் பின்புதான் பகையான நட்பில் பலியாகிப்போன உண்மைகளை அவன் உணர்ந்தான்.

யூலியஸ் சீஸர் : மாபெரும் வீரன். வரலாற்றில் இடம்பெற்ற மாமன்னன். அவனது நம்பிக்கைக்குரிய நண்பன் புரூட்டஸ். திறமைகளும், தீரமும் கொண்ட புரூட்டஸிடம் சீஸருக்கு எப்போதுமே ஒரு மரியாதையுண்டு. அவனது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுண்டு. அந்த நல்லெண்ணத்தைக் கருவாகக் கொண்டு சீஸரின் எதிரிகள் அவனைப் பயன்படுத்தினார்கள். புரூட்டஸின் செய்கைகளுக்கு மக்களிடம் ஓரளவு ஆதரவு இருந்தது. சீஸரின் எதிரிகள் வலையில் புரூட்டஸ் அகப்பட்டுப் போனான். திசை திருப்பப்பட்டான். புரூட்டஸ் தன்னைக் கொலை செய்யும் போது " நீயுமா புரூட்டஸ் " என்று சீஸர் கடைசியாக கேட்டார். அந்த ஒரு வார்த்தை அவன் நெஞ்சில் ஆழத்தில் பாய்ந்து நினைவை மீட்டியது. உணர்ச்சி வசப்பட்ட அறிவு விழித்துக் கொண்டதும், புரூட்டஸ் யூதாஸ் காரியத்தின் வழியையே பின்பற்றினான். ரோம சாம்ராஜ்யம் இரண்டு மாவீரர்களை இழந்தது.

லுமும்பா : கொங்கோ நாட்டின் புரட்சித் தலைவன். மிகச்சிறிய வயதில் பெல்சியத்துக்கெதிரான போராட்டத்தை வழிநடத்தியவன். மக்களின் நாயகன். அவனது எழுச்சியும் வீழ்ச்சியும் கண்ணீரை வரவழைக்கும் ஒரு காவியம். தன் எதிரிகளையும் மதிக்கும் பண்பாளன் என்பதால் கொங்கோவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், தான் பிரதமராகி, தன் அரசியல் எதிரியை ஜனாதிபதியாக்கினான். நம் உட்பகையை மறந்து ஒன்றுபட்ட நல்லெண்ணத்துடன் நம் நாட்டைக் கட்டியெழுப்புவோம். நமது மக்களை வாழவைப்போம் என்று சூளுரைத்தான். உட்பகையை உதறிவிடுவோம் என்ற அவனது நல்லெண்ணத்தின் தன்மைகளை நண்பர்கள் என்ற போர்வையுள் இருந்த நயவஞ்சகர்கள் நன்றாகவே பயன்படுத்திக்கொண்டார்கள். ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக மாறி லுமும்பாவையே தீர்த்துக்கட்டினார்கள். நாட்டுக்காகத் தனது எதிரிகளையே நண்பனாக்கிய அந்தத் தலைவன் குதறப்பட்ட விதம் வரலாற்றில் மிகவும் மிருகத்தனமான ஒரு ரத்தவடு. அவன் பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தை இழந்த கொங்கோ இன்றும் கொடுமைகளுக்கிடையேதான் பரிதவிக்கிறது.

மகாவீரர் : சமண மதத்தின் தீர்த்தங்கரர். சமத்துவத்தையும், உயிர்கள் மேல் உருவாகும் கருணையையும் அவர் போதித்த அளவுக்கு வேறு யாரும் போதித்ததில்லை. தமிழகத்தில் எழுந்த மிகப்பெரும் காப்பியங்களின் வரவு அவரது மதத்தினராலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதை வரலாறு தெரிந்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அத்தகைய உன்னதமானவருக்கும் எதிராக ஒரு கும்பல் அவர் கூட்டத்துக்குள்ளேயே உருவானது. அதற்குத் தலைமை தாங்கியவன் அவரது முக்கய சீடன் கோசாலன். அவரைப் பொய்யர் என்று புகன்று திரிந்தான். அவனும் அவரைப் போல ' அருள்வாக்கு ' சொல்லத் தலைப்பட்டான். ' ஆசிவகம் ' என்ற பெயரில் புதிய மதமொன்றை உருவாக்கினான். ஒருமுறை மகாவீரரையே நேரில் எதிர்த்து வாதாட வந்தான். மகாவீரர் அவனது துர்க்குணங்களை விட்டுவிடுமாறு கண்டித்தார். வெகுண்டு போன அவன் " நீர் இரத்த பேதியால் இறந்துப் போகக் கடவீர் " என்று அவருக்கே சாபம் கொடுத்தான். மகாவீரர் அமைதியாகச் சொன்னார் : " கோசாலனே! நான் இன்னும் பதினாறு ஆண்டு காலம் வாழ்வேன். உன் நிலைதான் பரிதாபகரமாக இருக்கும் " என்றார். இது நடந்த ஏழாவது நாள் கோசாலன் இறந்து போனான். பிறருக்கு அருள்வாக்கு சொல்வதாக பிதற்றியவனுக்கு அவன் வாழ்வுபற்றித் தெரியவில்லை.

யாழ்ப்பாண இராச்சியம்: ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பாராஜசேகரன், செகராஜசேகரன் என இணைபிரியாச் சகோதரர்களால் ஆளப்பட்டு வந்தது. சங்கிலியன் தோட்டத்தில் சந்தோசம் குடிகொண்டிருந்தது. தென்னாசியாவின் மிகப் பெரிய நூலகமான ' சரஸ்வதி மஹால் ' உருவாக்கப் பட்டிருந்த காலம். துரதிஷ்டவசமாக இணைபிரியாச் சகோதரர்களிடையே பதவி ஆசை வந்தது. பண்பாட்டை மறந்து ஒருவரை ஒருவர் ஒழிக்க முயன்றனர். அண்ணன் வன்னி அரசனிடமும், தம்பி சிங்கள மன்னனான சப்புமால் குமரையனிடமும் உதவி கேட்டனர். இணைத்திருந்த பாசமும், படைகளும் பிரிந்து நின்று பேயாட்டம் போட்டன. சப்புமால் குமரையன் தன் தந்தையைப் போல யாழ் மண்ணை அபகரிக்கும் திட்டத்திற்கு நேரம் வந்ததாக நினைத்தான். அவனது படைகள், இளையவனின் படைகளுக்கு உதவுவதாக வந்து யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தன. அதன் முதற்பலியாக சரஸ்வதி மஹால் ஆயிரக்கணக்கான நூல்களுடன் தீயில் சங்கமமாகிப் போனது. சரித்திரமும் மாறிப்போனது. சிங்கள ஆதிக்க வரவுக்கு விளக்கேற்றிய இளையவன் என்னவானான் என்பதற்கு இலங்கைச் சரித்திரம் பதில் கூறும்.

கண்ணத்துரை என்ற ஸ்ரீ விக்கிரமராசசிங்கன், கண்டியின் கடைசி மன்னன். அவனது அந்தரங்க அமைச்சன் பிலிமத்தலாவ. இருவரும் நல்ல நண்பர்கள். 1815 வரை அந்த இராசதானியை ஆங்கிலேயர்களால் பிடிக்கமுடியவில்லை. படையெடுப்புகளும் பலமுறை தோற்றுப்போயின. இறுதியில் பிரித்தானியரின் பிரித்தாளுந் தந்திரம் உருவாயிற்று. ' எகலப்பொல ' என்ற பிலிமத்தலாவவின் உறவினன் மூலம் இனவாதத்தை ஏவிவிட்டார்கள். தமிழன் ஆள்வதா என்ற உரிமைப் பிரச்சினை உருவாக்கப்பட்டது. அரசனைப் பிடித்துத்தர உதவினால் பிலிமத்தலாவுக்கு அரசுரிமை தரப்படும் என்று பேரம் வேறு பேசப்பட்டாயிற்று. ஒரு கட்டத்தில் மன்னன் செவிகட்கு இது எட்டிவிட்டது. பிலிமத்தலாவ தப்பி விட்டான். அவனது குடும்பம் சிதைக்கப்பட்டது. எனினும் இனவாதம் எழுந்து நின்று ஆங்கிலேயன் வரவுக்கு வழிவிட்டது. மன்னன் பிடிபட்டான். கோவையில் சிரச்சேதமும் செய்யப்பட்டான். ஆனால் எதிர்பார்த்தபடி பிலிமத்தலாவவோ, எகலப்பொலவோ ஆட்சி செய்ததாகச் சரித்திரமில்லை..


இப்படி ஒன்றுக்குள் ஒன்றாக உருவான குரோதங்கள் தான் பல உன்னதமான எண்ணங்களை ஈடேற்றமுடியாமல் செய்து விட்டன. பல மதங்கள், பலகட்சிகள், பலநாடுகள் - அகந்தையும் பொறாமையும் அற்ற சமுதாயம் எப்போது மலரும்? உட்பகைகள், உயர்வுகளைத் தகர்த்து விடுவதை வள்ளுவரும் கண்டிருக்கிறார் இப்படி:

" செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி " (குறள் 887)

**– கோத்திரன்**



நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்
SHARON
ஸ்ரீ
சிவசக்தி
வாக்கிய
நாட்காட்டி
வாய்மையே வெல்லும்
311-313 MITCHAM ROAD SW17 9JQ
LONDON TEL : 0208 6729353 0208 6463152
தரமான உணவுப் பொருட்கள்
மலிவான விலையில்..!
SHARON
CURRY POWDER
BOILED RED RICE
SHARON
சுவைத்தவர் உள்ளமெல்லாம் சமைத்தவர் நிலைக்கிட...!
தரமான உணவுப்பொருட்கள் மலிவான விலையில்
சுவைத்தவர் உள்ளமெல்லாம் சமைத்தவர் நிலைத்திட
ஸ்ரீ சிவசக்தி வாக்கிய கலண்டர்
1
HAPPY NEW YEAR 2005
சனி
SATURDAY
மார்கழி
17
08:12 AM → 03:55 PM
10:05 AM → 11:06 AM
01:02 PM → 02:00 PM
11:56 AM → 12:12 PM
02:57 AM → 04:35 AM
NEW YEAR'S DAY - HOLIDAY.
JANUARY 2005


MITHUS
Jewellery
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
நத்தார்
புது வருட
நல்வாழ்த்துக்கள்
76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814
Diamonds
Palace